இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

# PAATHUKAVALAN

1876 – 2026

150 ஆண்டுகள்

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 150 | இதழ் : 11 | திகதி : 31.09.2026 | விலை : 50.00

# புதிய ஆயரை வரவேற்ற யாழ்ப்பாண மறைமாவட்டம்

## யாழ. மறைமாவட்டஆயராகப் பேரருட்திரு கலாநிதி பி. அன்ரன் ரஞ்சித் ஆண்டகை பணிப்பொறுப்பேற்பு



பேரருட்தந்தை கலாநிதி பி. அன்ரன் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயராகத் ஆகஸ்ட் 26ம் திகதி யாழ். மரியன்னை பேராலயத்தில் பணிப்பொறுப்பேற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு நடைபெற்றது. புதிய ஆயரை வரவேற்கும் விழாவாக மட்டுமன்றி, ஒரு மேய்ப்பருக்கும் அவரது மேய்ப்புப்பணி அக்கறைக்கு ஒப்படைக்கப்பட்ட மக்களுக்கும் இடையிலான புனித உறவை வெளிப்படுத்தும் கொண்டாட்டமாகவும் இந்நிகழ்வு அமைந்தது.

**மகிழ்ச்சி நிறைந்த வரவேற்பு**

புனித மாடுத்தீனார் சிறிய குருமடத்தின் நுழைவாயிலில் இடம்பெற்ற வரவேற்புடன் விழா ஆரம்பமானது. இலங்கைக்கான திருத்தந்தையின் திருத்தூதரகத்தின் செயலர் பேரருட்திரு ரொபேர்ட்டோ லுக்கீனி, கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித், இலங்கையின் அனைத்து மறைமாவட்டங்களைச் சேர்ந்த ஆயர்கள், குருக்கள், துறவியர், பிறசமயத் தலைவர்கள், அரச அதிகாரிகள் மற்றும் பொதுநிலையினர் ஆகியோர் புதிய ஆயரை வரவேற்றனர்.

பத்திரிசியார் கல்லூரி பாண்ட் வாத்தியக் குழுக்களின் இசையுடனும் பாரம்பரிய நாதஸ்வர, மேள வாத்தியங்களின் மங்கல ஒலியுடனும் புதிய ஆயர் புனித மரியன்னை பேராலயத்தை நோக்கிப் பவனியாக அழைத்துச் வரப்பட்டார். தமது புதிய மேய்ப்பரை மறைமாவட்டத்தின் பேராலயத்திற்கு அழைத்துச் சென்ற இப்பவனி, யாழ்ப்பாண மக்களின் இறைநம்பிக்கையையும் பண்பாட்டு மரபையும் ஒருங்கே வெளிப்படுத்தியது.

பேராலயத்தில் ஆரம்ப வரவேற்புரையைத் தொடர்ந்து, மறைமாவட்டக்



குருமுதல்வர் அருட்தந்தை பி. ஜே. ஜெபரட்ணம் அவர்கள் புதிய ஆயருக்கு திருச்சிலுவையை வழங்க, ஆயர் அதனைப் பக்தியுடன் முத்தமிட்டார். பின்னர் பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி ஜெரோ ➡ ப.2

## இளவாலையில் இறையிரக்க ஆலயம்





இளவாலை பங்கில் புதிதாக அமைக்கப்பட்ட இறையிரக்க ஆலயம் கடந்த புரட்டாதி 09ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இளவாலை புனித அன்னாள் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை பேனாட் றெக்னோ அடிகளின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஒய்வுநிலை ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து ஆலயத்தை ஆசீர்வதித்து திறந்துவைத்து திருப்பலியைத் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். இந்நிகழ்வில் அருட்தந் தையர்கள், அருட்சகோதரிகள், இறைமக்களென பலரும் கலந்துகொண்டனர்.

யாழ். மறைமாவட்டத்தில் இரண்டாவதாக அமைக்கப்பட்டுள்ள இவ் இறையிரக்க ஆலயத்திற்கான அடிக்கல், 2023ஆம் ஆண்டு பங்குத்தந்தையாகப் பணியாற்றிய அருட்தந்தை எறிக்றொசான் அவர்களின் காலத்தில், அப்போதைய குருமுதல்வர் அருட்தந்தை பி.ஜெ.ஜெபரட்ணம் அடிகளால் நாட்டப்பட்டது. இவ் ஆலயத் துக்கான முழு கட்டுமானப்பணிகளை அர்ப்பணிப்புடனும் சிறப்பான முறையிலும் அழகாக அருட்பணி அ.எரிக்றொசான் அடிகளார் ஒருங்கமைத்திருந்தார்.

இவ் ஆலயம் அமைப்பதற்கான நிலப்பரப்பினை வைத்தியக் கலாநிதி திரு.சிவஞானமும் வைத்தியக் கலாநிதி திருமதி. ஞானமலர் சிவஞானமும் அவர்களின் பெற்றோர்களான திரு.அந்தோனிப்பிள்ளை, திருமதி. அன்னப்பிள்ளை சகோதரர் ஜோர்ஜ் இம்மானுவல் அவர்களின் நினைவாக யாழ் ஆயருக்கு நன்கொடையாக வழங்கி வைத்தனர்.

## ஆயர் இல்ல புதிய நியமனங்கள்



அருட்தந்தை
மனுவேற்பிள்ளை டேவிட
(குருமுதல்வர்)



அருட்தந்தை
அருளானந்தம் யாவிஸ்
(நிதி முகாமையாளர்)



அருட்தந்தை
பீற்றர் அமலதாஸ் கமல்ராஜ்
(ஆயரின் செயலாளர்)

யாழ். மறைமாவட்ட புதிய குருமுதல்வராக அருட்தந்தை மனுவேற்பிள்ளை டேவிட் அவர்கள் கடந்த 07ஆம் திகதி மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை பி. அன்ரன் ரஞ்சித் அவர்களால் நியமனம் பெற்றுள்ளார்.

அவருடன் இணைந்து மறைமாவட்ட நிதி முகாமையாளராக அருட்தந்தை அருளானந்தம் யாவிஸ் அவர்களும், மறைமாவட்ட ஆயரின் செயலாளராக அருட்தந்தை பீற்றர் அமலதாஸ் கமல்ராஜ் அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் குருக்கள் சிலருக்கான நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன. **யாழ். புனித அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தையாக அருட்தந்தை யோசப்தாஸ் ஜெபரட்ணம் அவர்களும், நெடுந்தீவு பங்குத்தந்தையாக அருட்தந்தை நிலான் யூலியஸ் அவர்களும், பூநகரி பதில் பங்குத்தந்தையாக அருட்தந்தை றிச்சட் ஒலிவர் றெரன்ஸ் அவர்களும், யாழ். மறைமாவட்ட அகவொளி குடும்ப நல நிலைய பதில் இயக்குனராக அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ் அவர்களும் யாழ். மறைமாவட்ட ஆயர் அவர்களால் நியமனம் பெற்றுள்ளனர்.**

இந்நியமனங்கள், யாழ் மறைமாவட்டத்தை புதிதாகப் பொறுப்பேற்ற பேரருட்தந்தை பி.அன்ரன் ரஞ்சித் ஆண்டகை அவர்களால் வழங்கப்பட்ட முதலாவது நியமனங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## யாழ். ஆயரை சந்தித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்



யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புதிய ஆயராக பொறுப்பேற்றுள்ள பேரருட்தந்தை பி. அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் ஆண்டகை அவர்களை, இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் நேற்றைய தினம் மரியாதை நிமித்தமாக சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின்

## செம்மணி மனிதப் புதைகுழிக்கு வெளிப்படையான விசாரணை வேண்டும்

– இலங்கை ஆயர் பேரவை

நாட்டின் நீதி, அமைதி மற்றும் நல்லிணக்கத்தைப் பாதிக்கும் முக்கிய விடய ங்கள் தொடர்பில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை அறிக்கையொன்றை வெளியிட்டுள ளது. ஆவணி மாதம் 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை நடைபெற்ற முழுமையான அமர்வைத் தொடர்ந்து வெளியிடப்பட்டுள்ள இவ்வறிக்கையில், மனித உரிமைகள், கடந் தகால சம்பவங்கள், சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சமூக நீதி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆயர்கள் கருத்துக்களை வெளி யிட்டுள்ளனர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் கண் டறியப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகள் தொடர்பில் நடுநிலையானதும் வெளிப்படையானதுமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ள ஆயர் பேரவை, குறிப்பாக செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் விரைவாக நிறைவுசெய்யப்பட்டு, உண்மை வெளிக் கொணரப்படுவதுடன் பொறு ப்புக்கூறலும் உறுதிப்படுத்தப்பட ➡ ப.7

## அருட்தந்தை அன்ரனி பெர்னாண்டோ பெனற் அடிகள் இறைவனடி சேர்ந்தார்



யாழ். மறைமாவட்ட குரு அருட்தந்தை அன்ரனி பெர்னாண்டோ பெனற் அவர்கள் கடந்த 06ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

1989ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட இவர் மயிலிட்டி, இளவாலை, பரந்தன் பங்குகளின் உதவி பங்குத்தந்தையாகவும் சண்டிலிப்பாய் பங்கின் பதில் பங்குத்தந்தையாகவும் கரவெட்டி, மானிப்பாய், கிளிநொச்சி, பருத்தித்துறை, பரந்தன் பங்குகளின் பங்குத்தந்தையாகவும் ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியக இயக்குநராகவும் மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குநராகவும் கிளிநொச்சி, பருத்தித்துறை மறைக்கோட்டங்களின் முதல்வராகவும் வவுனியா செட்டிக்குளம் இடம்பெயர்ந்தோர் முகாமிலும் பணியாற்றியுள்ளார்.

அருட்தந்தையின் பணிவாழ்விற்காக நன்றிகூறி அவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்றாடுவோம்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

150 முப்பொன் விழா

# சாட்டி சிந்தாத்திரை மாதா திருத்தலத்தின் வருடாந்த பெருவிழா

**17.09.2026 - 26.09.2026**

யாழ் மறைமாவட்டத்தின் முதன்மை யானதும், 482 ஆண்டுகள் பழமை வாய்ந்தது மான சாட்டி புனித சிந்தாத்திரை மாதா திருத் தலத்தின் வருடாந்த பெருவிழா, இம்மாதம் செப்டம்பர் 17ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு, கொடியேற்றத்துடன் பக்திச் சிறப்பு டன் ஆரம்பமாகின்றது.

திருவிழா ஆயத்த நாட்களில் தினமும் மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆயத்த நாள் வழிபாடுகள் நடைபெறும்.

செப்டம்பர் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு, திருச்செபமாலையுடன் நற்-கருணைப் பெருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படும்.

செப்டம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு, திருச்செபமாலையுடன் திருத் தலத்தின் வருடாந்த பெருவிழா, எமது யாழ் மறை மாவட்டத்தின் புதிய ஆயர் பேரருட்திரு அன்ரன் ரஞ்சித் பிள்ளை நாயகம் ஆண்டகை அவர்களின் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக சிறப்பாக ஒப்புக்கொடுக்கப்படும்.

மேலும், கொடியிறக்க விழா அக்டோபர் 4ஆம் திகதி காலை 11.00 மணிக்கு திருச் செபமாலையுடன் ஆரம்பமாகும்.

இந்த அருள்நிறைந்த திருவிழா நாட்களில் நடை பெறும் ஆயத்தநாள் திருவழிபாடுகளிலும், நற்கருணைப் பெருவிழாவிலும், திருத்தலத்தின் வருடாந்த பெருவிழா விலும் கொடியிறக்க விழாவிலும் பக்தியோடு கலந்து சிறப் பித்து, சாட்டி திருத்தல புனித சிந்தாத்திரை மாதாவின் வல்-லமை மிக்க பரிந்துரையில் இறையருளையும் ஆசீர்வா-தங்களையும் நிறைவாகப் பெற்றிட உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னையின் அருளில் ஒன்றிணைவோம்! அரு ளின் திருவிழாவில் பங்கேற்போம்! அன்னையின் பரிந்-துரையால் இறையருளைப் பெற்றிடுவோம்!

அனைவரும் வாரீர்!
அருள்பெற்றுச் செல்வீர்!

---

## விண்ணக வாழ்வின் 1ம் ஆண்டு நினைவு



பிறப்பு 27 . 03 . 1952

இறப்பு 15 . 09 . 2025

அமரர்

**மேரி ஜெயராணி ஞானப்பிரகாசம்**
**(கிருபா)**

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி15.09.2026 (செவ்வாய்க்கிழமை) காலை 5.45 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இத்திருப்பலியில் பங்குபற்றி இவரின் ஆன்ம இளைப்பற்றிக்காக செபிக்கும்டி வேண்டுகின்றோம்

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

தகவல்: அன்ரன் ஞானப்பிரகாசம்
41, பழைய பூங்கா வீதி
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்

AD-152

---

## 51ம் நாள் நினைவு



**அருட்சகோதரி மேரி ஈவோன்**

**பிறப்பு : 12.09.1939**
**இறப்பு : 30.07.2026**

நல்லதும் உண்மையுமான பணியாளியே,
உமது ஆண்டவரின் மகிழ்ச்சியில் பங்குகொள்.
விண்ணகத் தந்தையின் இல்லத்தில்
அமைதியாய் இளைப்பாறுங்கள், அம்மா
நீர் வாழ்ந்த அன்பு எங்கள் இதயங்களில்
என்றென்றும் வாழும்.

அன்னையின் வாழ்வே ஒரு செபம்!

---

மானிப்பாய் மண்ணில் பிறந்து, யாழ் திரு-குடும்பக் கன்னியர் மடத்தில் அர்ப்பண வாழ்வின் ஒளியாக மலர்ந்தவர் அன்னையார். 1961ஆம் ஆண்டு தனது முதல் வாக்குறு-தியையும், 1966ஆம் ஆண்டு இறுதி அர்ப்ப பணத்தையும் ஆண்டவருக்குச் செலுத்தி, அன்று முதல் இன்று வரை "இறைவனுக்கே மகிமை" என்ற ஒரே இலட்சியத்துடன் வாழ்ந்தார். சமூகப் பணியாளராக, ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கும் கரங்களாக, ஆதரவற்றோரின் துயரத்தில் துணை நிற்கும் இதய மாக அவர் விளங்கினார். யாருமற்ற குழந்தைகளுக்கு தாயாகி, அன்பையும் ஒழுக்கத்தையும் ஊட்டி வளர்த் தார். தையல் கலையில் தேர்ந்த கரங்களால் வாழ்வா-தாரத்தை மட்டும் கற்றுத் தராமல், "உழைப்பே உயர்வு" என்ற வாழ்க்கைப் பாடத்தையும் கற்றுக் கொடுத்தார். முதுமையின் தளர்ச்சியால் வாடியவர்களை முகம் சுளிக் காமல் பராமரித்த அவரது கருணை, இறை அன்பின் உயிருள்ள சாட்சியாக இருந்தது. இல்லத்தின் வாச லைத் தேடி வந்த ஒவ்வொருவரையும் அன்போடு வரவேற்ற அவரது புன்னகை, பலருக்கு இறைவனின் அரவணைப் பாகவே இருந்தது. அவரது வாழ்வே செபமாகி யது. அவரது உழைப்பே பிரசங்கமாகியது. 65 ஆண்டு கள் ஆண்டவருக்காக அர்ப்பணிக்கப்பட்ட அந்தப் புனிதப் பயணத்தின் நிறைவில், இறைவன் தம் விண்ணக இல்லத்திற்கு அவரை அன்புடன் அழைத்துக் கொண்டார்.


அம்மா... உம்மைப் பிரிந்து இன்று நாங்கள் நிற்கிறோம். ஆனால் அனாதைகளாக அல்ல. நீர் விதைத்த அன்பு நூறு மடங்காக இங்கே முளைத் திருக்கிறது.நீர் கற்றுத் தந்த தாழ்ச்சி இன்றும் எங்கள் வாழ்வில் தளிர்க்கிறது. நீர் ஏற்றிய இறை நம்பிக்கையின் விளக்கு இன்னும் ஒளிருகின் றது. உமது அன்பை எங்கள் கரங்களில் ஏந்தி, உமது தியாகத்தை எங்கள் இதயங்களில் இருத்தி, உமது நினைவுகளை எங்கள் வாழ்வில் சுமந்து, உமது ஆன்ம இளைப்பாற்றிக்காக இறை வனை நோக்கி செபிக்கிறோம்.

AD

---

## மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 10 . 1939



இறப்பு 09 . 09 . 2026

**அமரர் சந்தியாப்பிள்ளை சூசைப்பிள்ளை**

முன்னாள் கப்பல் துறைமுக உத்தியோகத்தர்
(கொழும்பு, திருகோணமலை)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் நியூசிலாந்தை வசிப்பிடமாக வும் கொண்ட திரு.சந்தியாப்பிள்ளை சூசைப்பிள்ளை அவர்கள் 09.09.2026 அன்று நியூசிலாந்தில் காலமானார். அன்னார் திரேசா தக்கராணி (றஞ்சிதம்) அவர்களின் அன்புக் கணவரும் ஜெறி, சனா அகியோரின் தந்தையுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள். நண்பர்கள் அனைவருக்கும் அறிய-த்தருகின்றோம்.

தகவல்
திரு. எஸ். அருமைநாயகம்
(மைத்துனன்)

'நிலா முற்றம்'
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

---

## விண்ணக வாழ்வில் நீங்கா நினைவுகள்

**13 ஆம் ஆண்டு நினைவு**



அமரர். **மோசஸ் பெனடிக்ற் ஆசீர்வாதம்**

பிறப்பு 15.06.1936 — இறப்பு 07.09.2013

**31 ஆம் நாள் நினைவு**



அமரர். **மோசஸ் பெனடிக்ற் பெனிக்னா றுக்மணி**

பிறப்பு 08.06.1944 — இறப்பு 03.08.2026

'நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு"

(2கொரி 5:1)

182, 2ம் குறுக்கு தெரு
யாழ்ப்பாணம்
0772961778

குடும்பத்தினர்

AD - 155

---

### செம்மணி மனித..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொணரப்படுவதுடன் பொறு ப்புக்கூறலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், 30 வருட உள்நாட்டுப் போரின்போதும் அதற்கு முன்னரும் இடம்பெற்ற பயங்கரவாதச் சம்பவங்கள் மற்றும் படு கொலைகள் தொடர்பில் உண்மையை கண்டறிந்து உரிய நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் ஆயர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இதனிடையே, மன்னாரில் ஏற்கனவே அமைக் கப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களைத் தொடர்ந்து இத்தகைய திட்டங்களை மேலும் விரிவுபடுத்தக் கூடாது என அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டுள்ள ஆயர்கள், எந்தவொ-வாரு அபிவிருத்தித் திட்டத்திற்கும் முன்னர் உள்ளூர் மக்களுடன் கலந்துரையாடி, மீனவர்களின் வாழ்வாதாரமும் சுற்றாடலும் பா-துகாக்கப்பட நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளனர்.

### யாழ். ஆயரைச் சந்தித்தார்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பங்களுக்கான நீதியை நிலைநாட்டுதல், அதற்கான சர்வதேச சமூகத்தின் நேரடித் தலையீட்டினை ஏற்படுத்தல், மனித உரிமை களுக்குப் புறம்பான பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதையும், அதைப் பயன்படுத்தித் தமிழ் இளை ஞர்கள், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் மற்றும் அநீதி யாகக் கைதுசெய்யப்படுவதையும் நிறுத்துவதற்கான முயற்சிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், பல தசாப்தங்களாக எவ்விதத் தீர்வுமின்றித் தொடரும் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு, கௌரவமான, நிரந் தரமான அரசியல் தீர்வொன்றைப் பெறுவதற்குரிய முயற்சிகள் உள் ளக இடப்பெயர்வுகள், காணி விடுவிப்பு, வவுனியாவில் முன்னெடுக் கப்படும் சிங்கள மயமாக்கல் திட்டமான மல்வத்து ஓயா திட்டம் ஆகியவை தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

# யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமடத்தில் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்ட இறையழைத்தலை ஊக்குவிக்கும் சிறப்பு நிகழ்வு

## "வந்து பாருங்கள்"

**இறை அழைத்தல்**


திருவிவிலியத்தின்படி கடவுள் பலரை நேரடியாக அழைத்தார். இதற்கு உதாரணமாக மோசே, ஆபிரகாம், பவுல் போன்ற பலரைக் குறிப்பிட முடியும். ஆனால் இவ் இறையழைத்தல் சமகாலத்தில் எமது கண்களுக்கு மறைக்கப்பட்டிருந்தாலும், இறைவன் பலரைத் தமது கருவிக ளாகப் பயன்படுத்தி இளையோர் மத்தியில் இறையழைத்தலை உருவாக்கி சிதைந்துபோன தனது ஆடுகளைக் கூட்டிச்சேர்க்கத் தனது பணிக்காக தன் சீடனாக உருவாக்குகின்றார்.

**புனித மடுத்தீனார் குருமடத்தின் பணி என்ன?**

இலங்கையின் முதற் சிறிய குருமடமாகிய புனித மடுத்தீனார் சிறிய குருமடமானது கடந்த 156 வருடங்களாகப் பல ஆயர்களையும் பல குருக்களையும் உருவாக்கியுள்ளதோடு, தொடர்ந்தும் அர்ப்பணியைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

குருக்களை உருவாக்கும் பணியை மட்டும் மேற்கொள்ளாது இறையழைத்தலை மேலும் வளர்த் தெடுப்பதற்கும் புனித மடுத்தீனார் சிறிய குருமடம் பெரும் பங்காற்றி வருகின்றது. இதன் முகமாகவே "வந்து பாருங்கள்"சிறப்பு நிகழ்வு ஒவ்வொரு வருடமும் நடை பெறுவது வழமையாக இருந்தாலும்கூட, கடந்த 2019ஆம் ஆண்டிற்குப் பின்னர் சில தவிர்க்கமுடியாத கொரோனா போன்ற காரணங்களினாலும் தற்காலிக மாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. அந்த இடைவெளி யைப் பூர்த்தி செய்யும் முகமாக மீண்டும் இவ்வாண்டு 2026இல் "வந்து பாருங்கள்"நிகழ்வு மூன்று நாட்கள் புனித மடுத்தினார் சிறிய குருமட அதிபர் அருட்பணி T.செல்வரட்ணம் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில் சிறப் பாக நடைபெற்றது.

இவ்வாண்டு நடைபெற்ற "வந்து பாருங்கள்: நிகழ்வு 28.08.2026 வெள்ளிக்கிழமையன்று புனித மடுத்தீனார் சிறிய குருமடத்தில் இறை அழைத்தலை ஊக்குவிக்கும் சிறப்பு நிகழ்வான "வந்து பாருங்கள்" நிகழ்வு ஆரம்பமானது. இதன் முதல்




**இறைவனின் அழைப்பை நீங்களும் உணர - மாண்புதனை இழந்த மனிதத்தை ஓர் யாழ் மறைமாவட்டக் குருவாகி மனித நேயத்தைக் காத்து, சிதைந்துபோன இயேசுவின் ஆடுகளைக் கூட்டிச் சேர்க்க விரும்புகிறாயா?**

நிகழ்வாக ஆரம்பச் செபமும் தொடர்ந்து அதிபரின் வரவேற்பும், நிகழ்வுகளின் அறிமுகமும் குருமட சிற்றால யத்தில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து..

அருட்சகோதரர்களின் அனுபவப் பகிர்வும் இடம்பெற்றது. இவ் அனுபவப் பகிர்வுகளை புனித பிரான் சிஸ் அருட்சகோதரர்களான ஜேசுதாஸ், அபிஷன், அருள்ராஜ், அபிசாந் ஆகியோர் வழங்கியிருந்தமை குறிப் பிடத்தக்கது. திருக்குடும்பக் கன்னியர்மட அருட்சகோதரி களால் "வாழ்வைத் தேடல்"எனும் கருப்பொருளில் இறை அழைத்தலை ஊக்குவிக்கும் நோக்கோடு கருத்தமர்வு நடை பெற்றது.

இறுதியாக "தொடர்புசாதனங்களின் சாதக பாதக விளைவுகள்"எனும் மையப் பொருளில் கருத்தமர்வு இடம்பெற்றது. இக்கருத்தமர்வினை யாழ் மறைநதி கத் தோலிக்க ஊடக மைய இயக்குநர் அருட்பணி அன்ரன் ஸ்ரீபன் அடிகளாரும், அவரது குழுவினரும் வழிப்படுத் தினர்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் செபமாலைத் தாசர் சபையைச் சேர்ந்த அருட்பணி யோசப் அவர்கள் தியானத்தை வழிப்படுத்தினார். இத்தியானத்தில் இறை அழைத்தலை எவ்வாறு பெற்று அதன்படி வாழ்வது என்பது தொடர்பாகத் தியானிக்கப்பட்டது. தொடர்ந்து யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை பி. அன்ரன் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் தனது ஆயத்துவ அபி ஷேக நாளின் நன்றித் திருப் பலியாக ஒப்புக்கொடுத்தார். ஆயர் அவர்கள் தனது மறையுரையின் மூலம் இறை அழைத்தலைப் பெற்றுக்கொண்ட நாம் அன்னை மரியாளின் அன்புப் பிள்ளைகளாகவும் அவரைப் பின்பற்றி வாழும் பிள்ளை களாகவும் வாழவேண்டும் என அழைப்பு விடுத்திருந் தார். அருட்பணி I.S. விஜேந்திரன் (அமதி) அடிகளா ரின் வழிகாட்டலில் "குருத்துவத்தை நோக்கிய வழிகாட்டல் எனும் கருப்பொருளில் கருத்தமர்வை வழிப்படுத்தி அழைத்தலின் உண்மையான மகத்துவம் குறித்துத் தெளிவுபடுத்தினார்.

தொடர்ந்து இறை அழைத்தல் தொடர்பான சிறப்பு நிகழ்வு புனித மடுத்தீனார் சிறிய குருமட மாண வர்களால் மேடையேற்றப்பட்டது. தொடர்ந்து வேலை, விளையாட்டுக்கள் என்பன இடம்பெற்றன. இதன் பின்னர் இறை அழைத்தல் தொடர்பான உரை, புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் உருவாக்கு நர் அருட்பணி T.குயின்சன் பெர்னாண்டோ அடிகளா ரால் வழங்கப்பட்டது.தொடர்ந்து மாலை 7.00 மணிய ளவில் நற்கருணை ஆராதனை இடம்பெற்றது. இதனை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி யின் உருவாக்குநரான அருட்பணி டினேசன் அடிகளர் வழிப்படுத்தினார். (தொடர்ச்சி 7ம் பக்கம்)

# திருச்சிலுவையின் மகிமையில் மகிழ்வுறும் திருச்சிலுவைக் கன்னியர்கள்

j௫ அவை புரட்டாதி 14ம் திகதியை திருச் சிலுவையின் மகிமையின் திருநாள் என நினைவூட்டும் போது உலகை கிறிஸ்து தமது சிலுவை மரத்தினால் இறந் து உயிர்ப்பினால் வென்றதைக் குறிக்கின்றது. பாவ உலகை மீட்க இறைவனின் அன்பு, சிலுவையில் வெற்றி அடைந்ததை இவ்விழா சிறப்பாக எடுத்துக்காட் டுகின்றது. இயேசு சிலுவையில் அறையப்பட்டதனால் சிலுவை மகிமை பெற்றது.

சிலுவை மரணத்தை முறியடித்து இயேசு உயிர்த்ததினால் விண்ணகக் கதவு திறக்கப்பட்டது. இதனால் திருச்சிலுவை வல்லமை பெற்றதுடன் மனித குலம் அனைத்திற்கும் நம்பிக்கையினதும் இரட்சிப்பின தும் சின்னமாக மாறியது. அவமானத்தின் சின்னமாகக் கருதப்பட்ட சிலுவை மகிமையின் சின்னமாக மாறி இன்று அனைவரது வாழ்விலும் தியாக வாழ்விற்கான அழைப்பைக் கொடுத்து அர்த்தமுள்ளதாக மாறியுள்ளது.

7ம் நூற்றாண்டு காலப்பகுதியில் உரோமை அரசின் மன்னன் மகா கொன்ஸ்ரன்ரைன் அவருடைய தாய் கெலனா மூலம் சிலுவை உட்பட கிறிஸ்தவ வர லாற்றுச் சின்னங்களைத் தேடி எருசலேமிற்குச் சென் றார். கி.பி. 326 இல் இயேசு பாடுபட்ட சிலுவை JNRJ



என்னும் வாசகப்பட்டையுடனும் அணிகளுடனும் ஏனைய இரு கள்வரின் சிலுவைகளுடனும் கண்டு பிடிக் கப்பட்டது. இயேசு அறையப்பட்ட சிலுவை புதுமை வல்ல மையையும் குணமளித்தலையும் காட்டியதால் ஏனைய இரு சிலுவைகளிலிருந்தும் பிரித்தறியப்பட்டு ஜெருசலேம் நகர அன்றைய ஆயர் மார்குரியசனாலும் மற்றும் புனித கெலனா அவர்களினாலும் உறுதி செய்யப்பட்டது.

கி.பி. 335 இல் மகா கொன்ஸ்ரன்ரைன் உண் மையான சிலவை கண்டு பிடிக்கப்பட்ட தினத்தை ஒரு பெருவிழாவாகக் கொண்டாட அனுமதியளித்துக் கண்டு பிடிக்கப்பட்ட இடத்தில் ஒரு தேவாலயத்தையும் கட்டு வித்தார். இதன் தொடர்ச்சியாக திருச்சிலுவையின் மகிமையின் திருவிழா கொண்டாடப்பட்டது.

திருச்சிலுவையை மகிமைப்படுத்தல் என்பது திருச்சிலுவையை நாம் வெளி அடையாளமாகத் தாங்கிச் செல்வது மட்டுமல்ல இயேசுவைத் நமது வாழ்வினால் வாழ்ந்து காட்டுவதுடன் இயேசு வாழ்ந்து காட்டிய அர்ப்பண முள்ள தியாக வாழ்விற்கு முன்னுரிமை கொடுத்து ஏற்றுக் கொண்டு சாட்சிய வாழ்வு வாழ்வதாகும். தன்னலமற்ற மனநிலையுடன் இறை - மனித அன்புறவில் வாழ்துடன் அமைதிக்காக ஏங்கும் மனித உள்ளங்களுக்கு சமாதான மளிக்கும் கருவிகளாக மாற திருச்சிலுவையின் மகிமை யின் நாள் அழைப்பு விடுக்கிறது.

இருபத்தோராம் நூற்றாண்டில் நவீன டிஜிட்டல் தொழில்நுட்ப யுகத்தில் விஞ்ஞானமும், இணையத்தளங்களும், திறன்மிகு கருவிகளும் மனித வாழ்வைக் கூறு போட்டுக் கலங்கடிக்கின் றது. அதிகரித்த விலைவாசிகளும், இயற்கை யின் சீற்ற அனர்த்தங்களும், மதுபோதை வஸ்து ஆதிக்கமும் மக்களை வாழவிடாது பண ஆசையிலும் விரைவு கலாசாரத்திலும் உந்தித் தள்ளுகின்றது. இதனால் சிறுவர் முதல் இளை யோர், முதியோர் வரை மத சார் நம்பிக்கைகள் இழந்து, ஒழுக்க விழுமியங்களை மறந்து மனித மாண்பை உதறித்தள்ளி, உறவுகளுடன் கதைக் கக்கூட நேரமில்லாமல், பாரம்பரிய கலாசார பழக்கவழக்கங்கள் நினைவிழந்து போக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்தச் சூழ்நிலையில் மேற்குலக நாடு களைப் போல ஆசிய நாடுகளிலும் துறவற

**அருட்சகோதரி றோமலா அன்ரனி HC**

அழைத்தல்கள் அருகி அர்த்தம் இழந்து வருகின்றன. ஆனாலும் திருச்சிலுவைக் கன்னியர்களாகிய நாம் "சிலு வையில் தான் மீட்பு" என்பதனை எமது விருதுவாக்காகக் கொண்டு இலங்கை மண்ணில் 96 வருடங்களாகப் பணி புரிந்து வருவது மூவொரு இறைவனின் பராமரிப்பை ஆழமாக நினைவூட்டுகின்றது. ஒன்பது மறைமாவட்டங் களிலும் இருபதிற்கும் அதிகமான குழுமங்களை நிறுவிக் கிளை பரப்பிய பெருவிருட்சமாக விழுதுகளை பூமியில் ஆழ மாகப் பதித்துத் தொடர்ந்தும் தலைநிமிர்ந்து பயணிப்போம் என இனமத மொழி பேதங்களைக் கடந்து உலக சவால் களுக்கும், திருஅவை மாற்றங்களுக்கும் முகங்கொடுத்து வாழ்கின்றனர்.

தாம் வாழும் பிரதேசங்களில் மக்களோடு மக்களாக பாலர் பராமரிப்பு, முன்பள்ளி, பாடசாலைக் கல்வி, உயர் கல்வி என கல்விப் பணியில் திருச்சிலுவைக் கன்னியர்க ளின் முன்மாதிரிகையான வழிகாட்டுதலும், கல்வி புகட்டுத லும் ஒழுக்க விழுமியங்களின் சிந்தனைத் தெளிவூட்டலும் இளையோர் இதயங்களைக் கவர்ந்துள்ளதுடன் அர்த்த முள்ள மனித வாழ்வு வாழ வழிகாட்டுகின்றனர்.

அத்துடன் சுகநலப் பணியை மனித வாழ்வின் கருவறை தொடங்கி கல்லறை வரை நமது அருட்சகோதரி கள் வைத்தியசாலைகள், சுகநல நிலையங்கள்,

**திருச்சிலுவையின் அருட்சகோதரிகளும் தாம் ஏற்றுக்கொண்ட அர்ப்பண வாழ்வை சபையின் தனித்தன்மை குன்றாமல் தொடர்ந்தும் பயணித்திருப்பது இறைவனின் செயலே.**

தாதியர் பயிற்சி நிலையங்கள், நடமாடும் மருத்துவ சேவை எனப் பல பணிகளாக கஷ்டப் பிரதேசங்களி லும், பின்தங்கிய பிரதேசங்களிலும் தொடருகின்றனர்.

"காலத்தின் தேவையே இறைவனின் சித்தம்" என்னும் எமது சபை ஸ்தாபகரின் நோக்கத்திற்கேற்ப கல்விப்பணி, மருத்துவப் பணியுடன் சமூகப்பணி, மறைக்கல்விப் பணி, உருவாக்கல் பணி, உளவள ஆற்றுப்படுத்தல், இளையோரை வழிப்படுத்தல், இளை யோரை வழிப்படுத்தல், இயறங்கையைப் பேணி வளங்களை சேமித்தல் எனப் பல்வேறு பணிகளில் திருச்சிலுவை அருட்சகோதரிகள் தம்மை இணைத்து உலக அரங்கில் வீறுநடை போடுகின்றனர்.

யோவான் 17:19 அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர்.... (தொடர்ச்சி 7ம் பக.)

# அன்னை மரியா பாஸ்கா மறைபொருள் அனைத்திற்கும் சாட்சியாக இருந்தார்



1. இயேசுவைக் கல்லறைக்குள் வைத்தபின் "மரியா மட்டுமே வியப்பும் மகிழ்ச்சியும் கலந்த உயிர்ப்பு அறிவிப்புச் செய்தியைப் பெறுவதற்காகத் தன்னையே தயாரித்துக் கொண்டு, நம்பிக்கையின் சுவாலையை அணையாது காப்பதில் நிலைத்திருக்கிறார்" (Address at the General Audience, 3 April 1996; in ,L 'Osservatore Romano, English Edition, 10 April 1996, p.7).
புனித சனி அன்று உணரப்பட்ட இந்த எதிர்பார்ப்பானது, ஆண்டவரின் அன்னையின் நம்பிக்கையில் மிகவும் உன்னதமான தருணங்களில் ஒன்றாகும்: உலகைச் சூழ்ந்திருக்கும் இருளில், அவர் தன்னை வாழ்வின் இறைவனிடம் முற்றிலும் ஒப்படைத்து, தன் மகனின் வார்த்தைகளை நினைவுகூர்ந்து, இறைவாக்குறுதிகள் நிறைவேறுமென நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்.

நற்செய்தி நூல்கள் உயிர்த்த ஆண்டவரின் பல்வேறு காட்சிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. ஆனால், இயேசுவுக்கும் அவரது தாய்க்கும் இடையே எந்தவிதமான சந்திப்பும் நடந்ததாகக் குறிப்பிடவில்லை. நற்செய்தியாளர்களின் இந்த அமைதியானது, உயிர்ப்புக்குப்பின் கிறிஸ்து மரியாவுக்குத் தோன்றவில்லை என்ற முடிவுக்கு இட்டுச் செல்லக் கூடாது. இருப்பினும், நற்செய்தியாளர்கள் ஏன் அந்தவொரு நிலைப்பாடு எடுத்தார்கள் என்பதற்கான காரணங்களைத் தேட அந்த அமைதியானது நம்மை அழைக்கின்றது.

**உயிர்த்த ஆண்டவரைச் சந்தித்தவர்களுள் மரியா எவ்வாறு இல்லாமல் இருக்க முடியும்?**

விடுபட்டதற்கான காரணங்களைக் கணித்தால், இந்த அமைதியானது நமக்கு மீட்பளிக்கத் தேவையானவை பற்றிய உண்மை மட்டுமே "சாட்சிகளாகக் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களின்" வார்த்தையிலே தரப்பட்டிருக்கக் கூடும் என்பது தெளிவாகும் (திப 10:41). அதாவது, "மிகுந்த வல்லமையோடு" (திப 4:33) ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பிற்கு அவர்களின் சாட்சியைப் பதிவுசெய்த திருத்தூதர்கள் அவர்களுக்குத் தோன்றுமுன், உயிர்த்த ஆண்டவர் பல நம்பிக்கைக்குரிய பெண்களுக்கு அவர்களது திரு அவை சார்ந்த பணியின் நிமித்தம் தோன்றினார் என்பதையும் பதிவு செய்திருக்கின்றனர்: "என் சகோதரர்களிடம் சென்று அவர்களைக் கலிலேயாவுக்குப் போகுமாறு சொல்லுங்கள் அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்" (மத் 28:10).

புதிய ஏற்பாட்டின் ஆசிரியர்கள் உயிர்த்த தன் மகனுடனான அன்னையின் சந்திப்பைப் பற்றிப் பேசவில்லையெனில், அத்தகைய சாட்சியம் ஆண்டவரின் உயிர்த்தெழுதலை மறுத்தவர்களால் மிகவும் சார்புடையதாகக் (Biased) கருதப்பட்டிருக்கலாம். அதனால் அது நம்பத்தகுந்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்காது என்ற காரணத்தினாலேயே இந்த அமைதி நிலவலாம்.

2. மேலும், நற்செய்தி நூல்கள் உயிர்த்த இயேசுவின் ஒருசில காட்சிகளை மட்டுமே குறிப்பிடுகின்றன. உயிர்ப்பு நாளுக்குப்பின் அந்த நாற்பது நாள்களில் என்னவெல்லாம் நடந்தன என்பது பற்றிய ஒரு முழுமையான தொகுப்பு நிச்சயமாக அவைகளில் கிடையாது. புனித பவுல், "அவர் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட சகோதரர் சகோதரிகளுக்கு ஒரே நேரத்தில் தோன்றினார்" (1கொரி 15:6) என்பதை நினைவுகூர்கின்றார். மிகப்பலரால் அறியப்பட்ட ஒரு விதிவிலக்கான நிகழ்வை நற்செய்தியாளர்கள் குறிப்பிடாமல் விடுத்ததை நாம் எவ்வாறு விளக்குவது? உயிர்த்த ஆண்டவர் அளித்த பிற காட்சிகள் நன்கு அறியப்பட்ட நிகழ்வுகளாக இருந்தபோதிலும், அவை ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை என்பதற்கு இதுவே தெளிவான சான்றாகும். முதல் சீடர்களின் சமூகத்தில் அன்னை மரியா வீற்றிருந்த நிலையில் (திப 1:14), இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்த தன் மகனைச் சந்தித்தவர்களிடமிருந்து அவர் எவ்வாறு விலக்கப்பட்டிருக்க முடியும்?

3. உண்மையிலேயே உயிர்த்த இயேசு முதன்முதலில் தோன்றிய நபர் அவரது அன்னையாகவே இருந்திருக்கக்கூடும் என்று கருதுவது நியாயமானதே. விடியற்காலையில் கல்லறைக்குச் சென்ற பெண்களின் குழுவில் மரியா இல்லாதிருந்தது (மாற் 16:1: மத் 28:1), அவர் அதற்கு முன்பாகவே இயேசுவைச் சந்தித்துவிட்டார் என்பதைச் சுட்டிக்காட்டக்கூடும் அல்லவா! சிலுவையின் அடியில் உண்மையுள்ளவர்களாய் நின்று, நம்பிக்கையில் மிகுந்த உறுதி கொண்டவர்களாய் விளங்கிய பெண்களே இயேசுவின் திருவுளப்படி உயிர்த்தெழுதலின் முதல் சாட்சிகளாக இருந்தனர் என்ற உண்மையும் இந்த அனுமானத்தை உறுதிப்படுத்துகிறது.

உண்மையிலேயே, உயிர்த்த ஆண்டவர் அவர்களுள் ஒருவரிடம், அதாவது மரிய மதலேனிடம் திருத்தூதர்களுக்கு உயிர்ப்புச் செய்தியைச் சொல்வதற்கான பணியை ஒப்படைக்கின்றார். ஒப்பிடுக. யோவா 20:17-18). இந்த உண்மையும் ஒருவேளை இயேசு மிகவும் நம்பிக்கையோடிருந்து தாம் பலவாறு சோதிக்கப்பட்டபோதும் அந்த நம்பிக்கையைக் குறைவுபடாமல் காத்துக்கொண்ட அவருடைய தாய்க்குத்தான் தம்மை முதலில் காட்டியிருப்பார் என்று எண்ணத் தோன்றுகின்றது.

**இறுதியாக. கல்வாரி மலையில் அன்னை மரியாவின் தனித்துவமான மற்றும் சிறப்பான உடனிருப்பும்**

சிலுவையில் தன் மகனின் பாடுகளோடு அவர் கொண்டிருந்த முழுமையான பிணைப்பும், மறைபொருளில் அவரது பங்களிப்பும் மிகச் சிறப்பான முறையில் அமைந்திருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்துகின்றன.

ஆ. அமல்ராஜ் OSM

ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த செடூலியஸ் (Sedulius) என்ற எழுத்தாளர், உயிர்த்தெழுந்த மகிமை நிறைந்த வாழ்வில் கிறிஸ்து முதலில் தம் தாய்க்கே தோன்றினார் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். உண்மையில், கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பின் போது அவர் உலகிற்குள் நுழைவதற்கான வழியாக இருந்த அன்னை மரியா, கிறிஸ்துவின் மகிமையுள்ள வருகையின் தூதராக மாறுவதற்காக, உயிர்த்த பின் வியத்தகு செய்தியைப் பரப்பவும் அழைக்கப்பட்டார். இவ்வாறு அவர் திளைத்த மகிமையில் உயிர்த்தெழுந்தவரின் திரு அவையின் மகிமைக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்கிறார்.

4.உயிர்த்தவருக்காகக் காத்திருந்து, அவரது உயிர்ப்புக் காட்சியின் போது சீடர்களின் குழுமத்தில் அவரைச் சந்திக்கின்ற திரு அவையின் மாதிரியாகவும் உருவகமாகவும் திகழும் அன்னை மரியா, பாஸ்கா மகிழ்ச்சியின் நிறைவில் தானும் அகமகிழும் பொருட்டு, உயிர்த்த தன் மகனுடன் ஒரு தனிப்பட்ட சந்திப்பைக் கொண்டிருந்தார் எல் கருதுவது மிகவும் ஏற்புடையதே.
ஆண்டவரின் அன்னை உலக மாந்தர் அனைவருக்கும் "மகிழ்ச்சியின் காரணியாக" (Cause Joy) விளங்குகிறார் புனித வெள்ளியன்று கல்வாரியிலும் (ஒப்பிடுக. யோவா 19:25), பெந்தகோஸ்தே நாளில் மேலறையிலும் (உக. திப 1:14) வீற்றிருந்த கன்னி மரியா.
கிறிஸ்து உயிர்த்தெழுந்ததன் சிறப்பான சாட்சியாகவும் இருந்திருக்கக்கூடும். இதன் வழியாக. பாஸ்கா. மறைப்பொருளின் அனைத்து முக்கியத் தருணங்களிலும் அவரது பங்கேற்பு முழுமை பெறுகிறது.
உயிர்த்த இயேசுவை வரவேற்கும் அன்னை மரியா, இறந்தோரின் உயிர்த்தெழுதலின் மூலம் நிறைவடைய விரும்பும் மனிதகுலத்தின் அடையாளமாகவும் முன்காட்டியாகவும் திகழ்கிறார்.

பாஸ்காக் காலத்தில் கிறித்தவ சமூகம் ஆண்டவரின் அன்னையை நோக்கி, "விண்ணக அரசியே, மகிழ்வீராக. அல்லேலூயா! என்று கூறி அகமகிழ அழைப்பு விடுக்கிறது. இதன்மூலம், கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பின்போது வானதூதர் அன்னையிடம் கூறிய "மகிழ்வீராக" என்ற வார்த்தையைக் காலமெல்லாம் தொடரச்செய்து, உலக மாந்தர் அனைவருக்கும் அன்னை மரியா "பேரின்பத்தின் காரணியாக" மாறுவதற்காக, இயேசுவின் உயிர்த்தெழுதலில் அவர் அடைந்த மகிழ்ச்சியை அது நினைவுகூர்கிறது.

## பங்குத்தளங்களில் மறைக்கல்வியை ஊக்கப்படுத்துவோம்

மறைக்கல்வி என்பது பிறப்பு முதல் இறப்பு வரை தொடர வேண்டிய ஒரு முயற்சியும், பயிற்சியுமாகும். இது வாழ்நாளெல்லாம் தொடர்ந்து நடைபெற்று நமது நம்பிக்கை வாழ்வில் வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் அளிக்க வேண்டும். இது மனித வாழ்வின் எல்லா நிலைகளிலும் சூழலிலும் தொர்ந்து நடைபெறவேண்டியதும் தவிர்க்க முடியாததுமாகும். ஒவ்வொரு பருவத்தினருக்கும் அவர் தம் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும், தேடல்களுக்கும் ஏற்ப தழுவி அமைத்து இது தரப்பட வேண்டும்.திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் நம்பிக்கையை ஆய்ந்து அறியவும், தனிப்பட்ட முறையில் கிறிஸ்துவோடு உள்ள உறவில் வளரவும், நம்பிக்கைகளில் சாட்சிகளாகத் திகழவும், இறையாட்சி சமூக உருவாக்கப் பணியில் ஈடுபாடும் கடமையும், உரிமையும் கொண்டவர்கள் நம் மக்கள் என்பதை உ ணர்ந்து வாழ ஒவ்வொரு பொதுநிலையினருக்கும் தரப்பட்ட வாய்ப்பு என்பதை நினைவில் கொள்ளவேண்டும். ஆனால் தற்போது மறைக்கல்வி நடைமுறையில் இருக்கும் பங்குகளில் நடைபெறும் மறைக்கல்வி உறுதிப்பூசுதல் பெறும்வரை நல்ல ஈடுபாட்டை சிறுவர்கள் பெற்று வருகின்றனர்.அதாவது உறுதிப்பூசுதல் பெறும்வரை மறைக்கல்வியில் சிறுவர்களின் நாட்டமும் ஈடுபாடும் செழித்தோங்குகிறது. பின்னர், அப்பிள்ளைகளின் பங்களிப்பும் பொது நிலையினரின் ஈடுபாடும் ஒத்துழைப்பும் குறைந்து வருவதை எண்ணும்போது மறைக்கல்வியில் முழு ஞானத்தையும், அறிவையும் தெளிவையும் பெறும் முன்பு மறைக்கல்வி வகுப்புக்கு பங்கெடுப்போரின் நாட்டம் இடை நிற்றலாக நிழலாடுவதை நாம் காணமுடிகிறது என்று சொல்லித் திரிவதைவிட வேதனைக்குரிய நிகழ்வாக பங்குத்தளங்களில் பங்கு அருட்பணியாளரும், மறைக்கல்வி ஆசிரியர்களும் தங்களது உழைப்பிலும், உற்சாகத்திலும் காட்டும் ஆர்வத்திற்கு ஈடாக பொதுநிலையினரின் ஒத்துழைப்பு இல்லையே என்று வேதனைப்படுகின்றார்கள்.

# வாழ்வின் துன்பங்கள் எமை இறைமாட்சிக்கு அழைத்து நிற்கின்றன

**முகவுரை**

**'துன்பங்களும் துயரங்களும் இறைவன் எம்மைப் பண்படுத்தப் பயன்படுத்தும் கருவிகள்'** ஒரு அழகான ஆழமான கருத்துக்கள் பொதிந்த வாக்கியம். ஒரு மனிதனின் வாழ்வில் துன்பங்களும், துயரங்களும் வேதனைகளும் இரண்டறக் கலந்து உள்ளன. இறைவன் நம்மைத்தனங்களையும் நிறை வையும், மகிழ்வான வாழ்வையும் மட்டும் தருபவர் அல்ல. அவற்றோடு இணைந்து துன்பங்களையும், இன்னல்களையும் சவால்களையும் அனுமதிக்கி-ன்றார். துன்பங்களுக்கு நாம் முகம் கொடுக்கும்போது இறைத் திட்டம் என்று அவற்றை ஏற்றுக்கொள்வதும், இறை நம்பிக்கையோடு செபித்து அவற்றுக்கு முகம் கொடுப்பதும் எமது இறை விசுவாசத்தின் வெளிப்பாடாக இருக்க வேண்டும். துன்ப வேளையில் மனம் சோர்ந்து போகாமல் துணிவோடு வாழ்வதும் நேர்மறையான எண்ணங்களை வளர்த்துக் கொள்வதும் கட்டாயமானதாகும்.

**துன்பங்கள் நம்மைப் பக்குவப்படுத்துகின்றன**

துன்பங்களும் துயரங்களும் நம்மை இறை மாட்சியில் வளரச் செய்கின்றன. இயேசுவின் துன்பங்களும் அதைத் தொடர்ந்து வந்த சிலுவையின் மாட்சியும் தான் துன்புறுவோருக்கு எதிர்நோக்காகவும் அடையாளமாகவும் இருக்கின்றது. நாம் ஒவ்வொரு வரும் இறைவனின் பிள்ளைகள். அவரின் பார்வையில் வலையேறப் பெற்றவர்கள். இறைவனின் கரங்களில் நாம் விலையுயர்ந்த முத்தாகவும் இரத்தினமாகவும் வைரமாகவும் இருக்கின்றோம். தங்கம் நெருப்பில் புடமிடப்பட்டுப் புதுப்பிக்கப்படுவது போலவும் வைரம் பட்டை தீட்டப்பட்டுப் பளபளப்பாக்கப்படுவது போலவும் நாம் இறைவனால் பக்குவப்படுத்தப்படுகின்றோம். நிலை வாழ்வுக்குரிய மக்களாகவும், இறை நம்பிக் கையில் நாம் ஆழம் பெறவும், இறைவன் எமது வாழ்வில் துன்பங்களை அனுமதித்து எம்மைப் புடமிடுகின்றார். எமது கிறிஸ்தவ வாழ்வுக்கு அடிப்படையாகவும் உள்ளது.

**பவுலின் வாழ்க்கையில் துன்பம்**

புனித பவுல் திரு அவையின் முக்கிய தூணாக விளக்குகின்றார். அவருடைய இறையாட்சிப் பணிகளின் மேன்மையால் கிறிஸ்துவின் திருத்தூதர்களில் ஒருவராக இல்லாதபோதும் திருத்தூதர் என்று அழைக்கப் படும் உயரிய பேற்றைப் பெற்றவர். ஒரு போர் வீரனாக இருந்து கிறிஸ்தவர்களை மிக மோசமாகத் துன்புறுத் தியவர். உயிர்த்த ஆண்டவரால் ஆட்கொள்ளப்பட்ட பின் கிறிஸ்துவுக்காக அனைத்தையும் குப்பை எனக் கருதி, ஒரு செய்தியை அறிவிப்பதில் ஆர்வம் கொண்டு அளவிட முடியாத துன்பங்களை அனுபவித்தவர்.

2 கொரிந்தியர் 11ம் அதிகாரம் 23 தொடக்கம் 28 வரை புனித பவுல் தான் அனுபவித்த துன்பங்களை விபரிக்கின்றார். **'வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கிறார்'** என்ற பவுலின் கூற்று அவர் எவ்வளவு தூரம் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு வாழ்ந்தார் என்பதையும் அவரையே தனது வாழ்வின் மையமாகக் கொண்டு துன்பங்களை தனக்குச் சாதகமாக்கி, மறைசாட்சியாக இறந்து இறைவனால் மகிமைப்படுத்தப்பட்டார் என்பதையும் நாம் பார்க்கின்றோம். புனித பவுலின் வாழ்வு எமக்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

**யோபுவின் துன்பம் நிறைந்த வாழ்வு**

வேதாகமத்தில் யோபு ஆகமம் துன்பியல் வாழ்வை கிறிஸ்தவர்களாகிய நாம் எவ்வாறு முகம் கொடுக்கவேண்டும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட் டாகும். நீதிமானாகவும் உண்மை நேர்மை உள்ள வராகவும் வாழ்ந்த யோபுவின் வாழ்க்கையில் எண்ணிறைந்த துன்பங்கள் ஏற்படுகின்றது. யோபுவை சோதிக்க அலகை இறைவனிடம் அனுமதி கேட்டபோது உயிரை மட்டும் எடுக்காதவாறு இறைவன் அனுமதி கொடுக்கின்றார். அலகையின் சோதனையால் யோபு பலவிதமான இன்னல்களை அனுபவிக்கின்றார். சொத்துக்கள், நிலபுலன்கள், கால்நடைகள் அவருடைய பிள்ளைகள் எல்லாவற்றையும் இழக்கின்றார். எல்லாவற்றையும் இழந்த நிலையிலும் இறைவன் தந்தார், இறைவன் எடுத்துக் கொண்டார் என்ற அவருடைய ஆழமான நம்பிக்கை வாழ்வு உடைந்து போக வில்லை. இறுதியாக அவருக்குக் கொடுமை யான நோய் வந்த போதும் துன்பங்கள் இறைவனால் அனு-மதிக்கப்படுகின்றன என்ற சிந்தனையோடு வாழ்ந்தார். இறுதியாக மனைவியால் ஒதுக்கப் பட்டு, குப்பை மேட்டில் புறந்தள்ளப்பட்டபோதும் இறைவனை மறுத லிக்க மறுக்கின்றார். அவரு-டைய ஆழமான இறை



விசுவாச வாழ்விற்கும், துன்பங்களை ஏற்று வாழ்ந்த மனப்பக்குவத்துக்கும் வெகுமதியாக இழந்த அனைத் தையும் மீண்டும் அடைவதோடு, நோய் நீங்கப் பெற்று இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டு, மகிழ்வோடு வாழ்கின் றார். எமது வாழ்விலும் யோபுவின் மனநிலை இருந் தால் துன்பங்களை ஏற்று வாழும் மனப்பக்குவத்தை நாம் பெற்றுக்கொள்வோம்.

**மரியாவின் வாழ்விலும் துன்பம்**

புனித கன்னிமரியா இறைவனின் தாயாக இருந்தும் தனது வாழ்வில் அளவிடமுடியாத துன்பங்க ளையும் இன்னல்களையம் அனுபவித்தாள். கிறிஸ்து வின் பிறப்பு அறிவிக்கப்பட்டபோது கலக்கம் அடைகின் றாள் (லூக். 1: 29) பேறுகாலம் வந்து தங்குவதற்கு இடம் தேடி அலைந்து திரிந்தபோது இடம் கிடைக்காமையால் துன்புறுகின்றாள். (லூக்கா 2:27) பாலக இயேசுவை ஏரோது கொல்லத் தேடியபோது அளவிடமுடியாத துன்பத் துக்கு முகம் கொடுக்கின்றாள். குழந்தையை ஏரோது மன்னனின் கொலை வெறியில் இருந்து பாதுகாக்கத் தனது கணவரோடு எகிப்துக்குத் தப்பியோடிய போது வேதனையடைந்தாள். (மத்தேயு 2: 13-15) இறைமகன் இயேசுவுக்கு பன்னிரு வயது நடக்கும்போது ஜெருசலேம் தேவாலயத்தில் காணாமல் தேடிய பொழுது களில் மரியாவின் இதயம் சொல்லொணா வேதனையடைந்தது.

இவை எல்லாவற்றையும் தாண்டி இறைமகன் இயேசுவின் மூன்று வருடப் பகிரங்கப் பணிவாழ்க் கையில் அவர் முகம் கொடுத்த சவால்கள் அச்சுறுத்தல் காரணமாக அளவிட முடியாத துன்பங்களை அனுபவித் தார். இறுதியாக யேசுவின் கல்வாரிப் பயணமும், சிலுவையின் பாதையும் மரியாவின் உச்சக்கட்ட வேதனையாகும். யேசு சிலுவை சுமந்து போகும் போது கூட வழிநடந்து தானும் அந்த வேதனைகளில் பங்கெடுத்தாள். இறுதியாக யேசுவைச் சிலுவையில் அறைந்த போது அருகில் இருந்து அந்தத் துயரத்தில் பங்கெடுத்தது மட்டுமல்ல, தனது மகனின் இறந்த உடலை மடியில் தாங்கியபோது வியாகுல அனனை யாகக் கண்ணீர் சிந்தி அழுதாள். இத்தனை துன்பங்க ளையும் சந்தித்த மரியாள் இறைத்திட்டம் என்று அனைத்தையும் ஏற்று வாழ்ந்ததால் மூவொரு கடவுளால் மாட்சிப்படுத்தப்பட்டாள்.

**கிறிஸ்துவின் வாழ்வில் துன்பம்**

தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என் பின்னே வரட்டும் என்ற கிறிஸ்துவின் வாழ்வி லும் துன்பமும் துயரமும் நிறைந்து காணப்பட்டது. இறைமகன் யேசு நமது மீட்புக்காக இறைத்திட்டத்தை நிறைவேற்றத் துன்பங்களை எல்லாம் ஏற்றுக்கொண டார். அவர் அனுபவித்த உச்சக்கட்ட வேதனைகளின் போது வானகத் தந்தையோடு இணைந்திருந்து தன்னை அவருடைய திட்டத்துக்கு விட்டுக்கொடுத்து தன்னை முழுமையாக அர்ப்பணம் செய்தார்.

அவர் அனுபவித்த துன்பங்களுக்கு மாட்சியாக மூன்றாம் நாள் உயிர்பெற்று எழுந்தார். துன்பங்களும் துயரங்களும் எம்மை மாட்சிக்கு அழைத்து நிற்கின்றது. என்பதைக் கிறிஸ்துவின் வாழ்வு எமக்கு உறுதிப்படுத்துகின்றது.

**நிறைவாக**

எமது வாழ்வில் நாம் முகம் கொடுக்கும் துன்பங்களும் துயரங்களும் இன்னல்களும் அளவிட முடியாத வேதனையாக இருந்தாலும் அவற்றில் இறைவன் எமக்கு ஒரு செய்தியைத் தருகின்றார். அந்தச் செய்திக்கு ஞானத்தோடு செவிசாய்த்து , அதைப் புரிந்து கொண்டு வாழ்ந்தால் அவை எமது மீட்புக்கானது என்பதை உணருவோம். இவ்வாறாக எமக்குத் துன்பங்கள் இறைவனால் அனுமதிக்கப் படுகின்ற பொழுது தரையில் வீழ்ந்த சவுலைப் போலவும் துன்பங்களை இறைவன் அனுமதிக்கின் றார் என்ற கொள்கையோடும் நம்பிக்கையோடும் வாழ்ந்த யோபுவைப் போலவும் இறைத்திட்டம் என்று ஏற்று வாழ்ந்த மரியாவைப் போலவும் துன்பங்கள் அனைத்தும் மீட்புக்கானது என்று சிலுவை மரணம் மட்டும் வாழ்ந்த யேசுவைப் போலவும் நாம் வாழ முற்படுவோம். எமது வாழ்வின் துன்பங்கள் அனைத் தும் இறையாட்சிக்கானது மீட்புக்கானது என்பதை உணர்ந்து எமது வாழ்வை முன்னெடுப்போம்.

**இ.அ.அமலரட்ணம்**

**வேதாகமத்தில் யோபு ஆகமம் துன்பியல் வாழ்வை கிறிஸ்தவர்களாகிய நாம் எவ்வாறு முகம் கொடுக்கவேண்டும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். நீதிமானாகவும் உண்மை நேர்மை உள்ளவராகவும் வாழ்ந்த யோபுவின் வாழ்க்கையில் எண்ணிறைந்த துன்பங்கள் ஏற்படுகின்றது. யோபுவை சோதிக்க அலகை இறைவனிடம் அனுமதி கேட்டபோது உயிரை மட்டும் எடுக்காதவாறு இறைவன் அனுமதி கொடுக்கின்றார்.**

# இறைமக்களோடு நடந்த ஒரு நல்ல ஆயனின் வாழ்வும் பணியும்

## -அருட்தந்தை அன்ரனி பெனாண்டோ பெனட்-



மடு அன்னை திருத்தலத்தில் நிலவிய அசாதாரணமான சூழ்நிலை காரணமாக தேவன்பிட்டிக்கு எடுத்துவரப்பட்ட திருச்சுருபம் முழங்காவில் அன்பகத்தில் இருந்து மன்னார் ஆயர் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட பொதி செய்யப்படுகிறது திகதி - 22.07.2008 நேரம் காலை 08.01

**யாழ். மறைமாவட்டத்தின் அருட்பணியாளரும், பல்வேறு பங்குகளிலும் மறைக்கோட்டங்களிலும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அருட்பணி செய்தவருமான அருட்தந்தை அன்ரனி பெனாண்டோ பெனட் அவர்கள் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 06ஆம் திகதி ஆண்டவரின் சந்நிதி அடைந்தார். அவரது மறைவு யாழ்ப்பாண மறைமாவட்டத்திற்கும், அவர் பணியாற்றிய பங்குகளின் இறைமக்களுக்கும், உடன் பணியாற்றிய குருக்கள், துறவிகள் மற்றும் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த இழப்பாக அமைந்துள்ளது.**



அருட்தந்தை அன்ரன் ஸ்ரீபன்
இயக்குநர்
மறைநதி கத்தோலிக்க ஊடகமையம்

அருட்தந்தை பெனட் அவர்களின் குருத்துவ வாழ்வு வெறுமனே அவர் வகித்த பொறுப்புகளின் பட்டியலல்ல. யுத்தம், இடம்பெயர்வு, வறுமை, அச்சம், இழப்பு மற்றும் துயரத்தின் மத்தியில் மக்களோடும் குருக்களோடும் இணைந்து நடந்த ஒரு நீண்ட மேய்ப்புப் பயணமாகும்.

**பிறப்பும் குருத்துவ அழைப்பும் ஆரம்பகாலப் பணியும்**

1961 ஆம் ஆண்டு ஆடி மாதம் 23ஆம் திகதி யாழ். தீவகம் மண்டைதீவில் பிறந்த அருட்தந்தை பெனட் அவர்கள் 1974ம் ஆண்டு தனது 13வது வயதிலேயே இறையழைப்பை ஏற்று, புனித மாட்டீனார் சிறிய குருமடத்தில் இணைந்து 1989 ஆம் ஆண்டு ஆனி மாதம் 19ஆம் திகதி யாழ் மறைமாவட்டக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அன்று தொடங்கிய அவரது குருத்துவப் பயணம், இறைவனுக்கும் திருஅவைக் கும் இறைமக்களுக்கும் அர்ப்பணிக்கப்பட்ட சேவையாக பல தசாப்தங்கள் தொடர்ந்தது.

1989, 90களில் மயிலிட்டிப் பங்கில் உதவிப் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார். யுத்தச் சூழ்நிலையால் மக்கள் தமது சொந்த இடங்களைவிட்டு இடம் பெயர்ந்தபோது, அவர்களோடு இணைந்து இளவாலைப் பங்கிலும் உதவி பங்குத்தந்தையாக அருட்பணி செய்தார்.

1991 முதல் 1993 வரை கிளிநொச்சி-பரந்தன் பகுதியில் உதவி பங்குத்தந்தையாகவும், 1993 முதல் 1995 வரை சண்டிலிப்பாய் பங்கில் பதில் பங்குத்தந்தையாகவும் பணியாற்றினார். இக்காலங்களில் இடம்பெயர்வுகளாலும் பல்வேறு சவால்களாலும் பாதிக்கப்பட்ட மக்களை ஒருங்கிணைத்து, அவர்களின் ஆன்மீக மற்றும் மனிதாபிமானத்தேவைகளில் துணையாக நின்றார். 1996 முதல் 1998 வரை கரவெட்டி பங்குத்தந்தையாகப் பணியாற்றிய அவர், யாழ். குடாநாட்டின் பாரிய இடம்பெயர்வுக்குப் பின்னர் மக்களின் துயரங்களையும் வாழ்வியல் சவால்களையும் நெருக்கமாகப் பகிர்ந்து கொண்டார்.

**பிலிப்பைன்ஸில் மேய்ப்புப்பணி அனுபவம்**

1998, 99 காலப்பகுதியில் பிலிப்பைன்ஸ் நாட்டில் மேய்ப்புப்பணி சார்ந்தகள அனுபவப் பயிற்சியைப் பெற்றார். பல்வேறு சமூகச் சூழல்களில் திருஅவை மக்களோடு எவ்வாறு இணைந்து பணியாற்றுகிறது என்பதையும், மக்களோடு நெருக்கமாகப் பயணிக்கும் மேய்ப்புப் பணியின் முக்கியத்துவத்தையும் அனுபவத்தின் வழியாகக் கற்றுக் கொண்டார். நாடு திரும்பிய பின்னர் 1999 முதல் 2005 வரை மானிப்பாய்ப் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார்.

**வன்னிப் போர்க்காலத்தில் மக்களோடு நின்ற ஆயன்**

2005 ஆவணி முதல் 2009 தை வரை கிளிநொச்சி-முல்லைத்தீவு மறைக்கோட்டத்தின் முதல்வராகவும் கிளிநொச்சிப் பங்குத்தந்தையாகவும் பணியாற்றினார். வன்னி கடுமையான யுத்தத்தையும் தொடர்ச்சியான இடம் பெயர்வுகளையும் எதிர்கொண்ட காலம் அது. அந்த நெருக்கடியான சூழலில் மக்களிடமிருந்து விலகி நிற்காமல், அவர்கள் இடம்பெயர்ந்த இடங்களுக்குச் சென்று சந்தித்தார். காயமடைந்தவர்களை வைத்தியசாலைகளில் தரிசித்து ஆறுதல் கூறியதுடன், அத்தியாவசிய உதவிகளைப் பெற்றுக்கொடுப் பதிலும் அக்கறையுடன் செயற்பட்டார். அத்துடன், வன்னியில் பணியாற்றிய குருக்களை ஒருங்கிணைத்து, அவர்களின் அருட்பணி தொடர்ந்து நடைபெறுவதற்கும் துணைநின்றார்.

**அருட்தந்தை கருணாரத்தினம் (கிளி) அடிகளாரின் மறைவு**

2008 சித்திரை 20ஆம் திகதி ஞாயிறு திருப்பலி நிறைவேற்றிவிட்டுத் திரும்பிய அருட்தந்தை கருணாரத்தினம் (கிளி) அடிகளார் கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்தார். இந்தத் துயரமான நிகழ்வின் போது, அவரது உடலை உரிய இடத்திற்குக் கொண்டு வருதல், இறுதி அஞ்சலி மற்றும் இரங்கல் திருப்பலி உள்ளிட்ட திருஅவையின் இறுதி மரியாதைகள் உரிய முறையில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளில் அருட்தந்தை பெனட் அவர்கள் முக்கிய பங்காற்றினார்.

ஒரு சக குருவின் இழப்பு அவருக்கு தனிப்பட்ட துயரமாகவும் அமைந்தது. வன்னியில் பணியாற்றிய குருக்களின் பாதுகாப்பு, தேவைகள் மற்றும் சவால்களை நன்கு அறிந்திருந்த அவர், அவர்களுடன் நெருக்கமாகப் பயணித்தார்.

**மடு அன்னையின் திருச்சொரூபப் பாதுகாப்பில் பங்களிப்பு**

2008 ஆம் ஆண்டு மடுத் திருத்தலத்தைச் சூழ்ந்த யுத்த நிலைமை தீவிரமடைந்தபோது, மடு அன்னையின் திருச்சுரூபத்தின் பாதுகாப்பு பெரும் கவலையாக இருந்தது. திருச்சொரூபம் மடுத் திருத்தலத்திலிருந்து அகற்றப்பட்டு பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தேவன்பிட்டி ஆலயத்தின் திருப்பண்டக் காப்பகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது.

அங்கு அன்னையின் திருச்சுரூபம் இருப்பதை அறிந்த மக்கள், யுத்த அச்சத்தையும் பொருட்படுத்தாமல் அன்னையைத் தரிசிக்கச் சென்றனர். அந்த இருண்ட காலத்தில் அது மக்களின் நம்பிக்கைக்கும் ஆறுதலுக்கும் அடையாளமாகத் திகழ்ந்தது. யுத்த நிலைமை மேலும் மோசமடைந்தபோது, திருச்சுரூபத்தை மீண்டும் மன்னார் பகுதிக்குப் பாதுகாப்பாகக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளில் அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் அவர்களுடன் இணைந்து அருட்தந்தை பெனட் அவர்களும் முக்கிய பங்காற்றினார்.

2008 ஆடி 22ஆம் திகதி, பாதுகாப்பாகப் பெட்டியில் வைக்கப்பட்ட மடு அன்னையின் திருச்சுரூபம் அன்பகம் வளாகத்திலிருந்து மடு வைத்தியசாலை அம்புலன்ஸ் மூலம் ஓமந்தை ஊடாக மன்னார் நோக்கி எடுத்துச் செல்லப்பட்டது. இந்த ஆபத்தான பணியில் அருட்தந்தை பெனட் அவர்களின் உடனிருப்பும் பங்களிப்பும் அவரது குருத்துவ வாழ்வின் மறக்க முடியாத வரலாற்றுச் சாட்சியாக அமைந்தது.

**போருக்குப் பின்னர் மக்களுக்கான பணி**

2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர், வன்னி மக்கள் வவுனியா-செட்டிகுளம் பகுதிகளில் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த காலத்தில், 2009-2010 இல் அவர்களுக்காக அருட்தந்தை பெனட் அவர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றினார். துயரத்திலும் நிச்சயமற்ற நிலையிலும் வாழ்ந்த மக்களைத் தேடிச் சென்று சந்தித்து, அவர்களது தேவைகளை அறிந்து, உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதோடு ஆன்மீக ஆறுதலையும் மனிதநேயத் துணையையும் வழங்கினார்.

**ஜேர்மனியில் தமிழ் மக்களுக்கான ஆன்மீகப்பணி**

2010 முதல் 2016 வரை ஜேர்மனியில் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் இயக்குநராகப் பணியாற்றினார். தாயகத்தை விட்டு வெளிநாடுகளில் வாழ்ந்த தமிழ்க் கத்தோலிக்க மக்களின் ஆன்மீக மற்றும் சமூகத் தேவைகளில் துணை நின்றதுடன், அவர்களுக்கும் திருஅவைக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துவதிலும் பெரும்பங்காற்றினார்.

**மறைக்கல்விப் பணியில் ஒரு புதிய அத்தியாயம்**

2016 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மறைமாவட்டத்திற்குத் திரும்பிய அவர் மறைக்கல்வி நிலையத்தின் இயக்குநராகப் பணியாற்றினார். அவரது காலத்தில் நிலையத்தின் செயற்பாடுகள் மற்றும் கட்டமைப்பு வசதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டன. வளாக அபிவிருத்தி, குறிப்பாக தார் வீதிகள் அமைத்தல் போன்ற பணிகளிலும் அவர் அக்கறையுடன் செயற்பட்டார்.

மறைக்கல்வி என்பது வெறுமனே பாடங்களைக் கற்பிக்கும் பணியல்ல எதிர் காலத் தலைமுறையினரின் விசுவாச வாழ்வை உருவாக்கும் முக்கியமான பணியாகும் என்பதை உணர்ந்து, அதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். மறையாசிரியர் வதிவிடப் பயிற்சி, இலங்கையின் அப்போஸ்தலர் புனித யோசப்வாஸ் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட கண்காட்சி போன்றவை அவரது பணிக்காலத்தின் சிறப்பான முயற்சிகளாக அமைந்தன.

**பருத்தித்துறை மற்றும் கிளிநொச்சி மறைக்கோட்டங்களில்**

2020 முதல் 2024 வரை பருத்தித்துறைப் பங்குத்தந்தையாகவும் பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வராகவும் பணியாற்றினார். 2024 முதல் 2025 வரை பரந்தன் பங்குத்தந்தையாகவும் கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வராகவும் பணியாற்றினார். பல ஆண்டுகளாகப் பெற்ற வன்னிப் பகுதி அனுபவத்தையும், மக்களோடும் குருக்களோடும் நெருக்கமாகப் பயணித்த பண்பையும் இப்பொறுப்புகளிலும் தொடர்ந்து வெளிப்படுத்தினார்.

**குருக்கள் ஒன்றியத்தின் தலைவர்**

யாழ். மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியத்தின் தலைவராகவும் பணியாற்றிய அருட்தந்தை பெனட் அவர்கள், குருக்களின் ஆன்மீக நலன், அருட்பணித் தேவைகள் மற்றும் பணிச் சவால்களை ஒருங்கிணைப்பதில் அக்கறையுடன் செயற்பட்டார். குருக்களோடு நெருக்கமாகப் பழகும் அவரது இயல்பும், அவர்களின் தேவை களைப் புரிந்து கொள்ளும் பண்பும் இப் பொறுப்பில் அவருக்குப் பெரிதும் துணையாக அமைந்தன.

**அன்பும் எளிமையும் நிறைந்த ஒரு நல்ல குரு**

அருட்தந்தை பெனட் அவர்களின் குருத்துவ வாழ்வின் தனிச்சிறப்பாக அவரது அன்பும் எளிமையும் மனித நேயமும் விளங்கின. அவர் அனைவரையும் பதவி, அந்தஸ்து, சமூக நிலை போன்ற வேறுபாடுகளின்றி ஒரே அன்போடு அணுகினார் அவரிடம் பேசுவதற்கு யாருக்கும் தயக்கம் இருக்கவில்லை. அவருடைய எளிமையான வாழ்க்கை முறையும் அன்பான அணுகுமுறையும் மக்களின் மனங்களில் ஆழமான இடத்தைப்பெற்றன. அவர் போதித்த விசுவாசத்தைத் தனது வாழ்விலும் நடைமுறைப்படுத்த முயன்றார். திருப்பலி, இறைவேண்டல் மற்றும் இறைமக்களுக்கான சேவை ஆகியவற்றின் வழியாகத் தனது குருத்துவ அழைப்பை வாழ்ந்தார்.

அவரது குறிப்பிடத்தக்க தனிச் சிறப்புகளில் ஒன்று, மக்களை அவர்களுடைய பெயரைச் சொல்லி அழைத்ததாகும். ஒருவரின் பெயரை நினைவில் வைத்திருப்பது அவர்மீது கொண்ட தனிப்பட்ட அக்கறையின் வெளிப்பாடாகும். அதனால், அவர் பணியாற்றிய இடங்களில் மக்கள் அவரை வெறும் பங்குத்தந்தையாக மட்டுமல்லாது, நண்பராகவும் ஆலோசகராகவும் ஆன்மீகத் துணையாகவும் அனுபவித்தனர்.

**மக்களோடு நடந்த ஒரு நல்ல ஆயன்**

அருட்தந்தை அன்ரனி பெனாண்டோ பெனட் அவர்களின் வாழ்வை ஒரே வரியில் சொல்ல வேண்டுமானால், “மக்களோடு நடந்த ஒரு நல்ல ஆயன்” என்பதே பொருத்தமானது. மக்கள் இடம்பெயர்ந்தபோது அவர்களோடு நடந்தார். அவர்கள் அஞ்சியபோது அவர்களுடன் நின்றார். காயமுற்றபோது அவர்களைத் தேடிச் சென்றார். துயருற்றபோது ஆறுதல் அளித்தார். குருக்கள் சவால்களை எதிர் கொண்டபோது துணையாக இருந்தார். சக குரு உயிரிழந்தபோதுஇறுதி மரியாதைகளில் முன்னின்றார்.

மடு அன்னையின் திருச் சுரூபம் ஆபத்தில் இருந்தபோது அதன் பாதுகாப்பில் பங்களித்தார்.போருக்குப் பின்னரும் முகாம்களில் வாழ்ந்த மக்களைத் தேடிச்சென்றார்.வெளிநாட்டில் வாழ்ந்த தமிழ் மக்களுக்கும் அருட்பணி செய்தார். மறைக்கல்வி நிலையத்தின் வளர்ச்சிக்காக உழைத்தார்.

இவை அனைத்திற்கும் மேலாக, அன்பு, எளிமை, விசுவாசம், பக்தி மற்றும் மனிதநேயம் ஆகிய பண்புகளால் மக்களின் உள்ளங்களில் இடம் பிடித்தார்.அவர் வாழ்ந்த வாழ்க்கையே அவர் போதித்த நற்செய்திக்குச் சாட்சியாக அமைந்தது.

அருட்தந்தை பெனட் அவர்கள் இன்று நம்மிடையே உடலால் இல்லை. ஆனால் அவர் பணியாற்றிய பங்குகளிலும், அவருடன் பயணித்த குருக்களின் நினைவுகளிலும், அவரால் ஆறுதல் பெற்ற மக்களின் உள்ளங்களிலும் அவரது நினைவு என்றும் வாழும். அவர் பலருக்கு குருவாகவும், நண்பராகவும், ஆறுதலாகவும், நம்பிக்கையாகவும் இருந்தார். குறிப்பாக யுத்தம் மற்றும் இடம்பெயர்வின் இருண்ட நாட்களில் மக்களோடு அவர் பகிர்ந்து கொண்ட துயரங்களும் செய்த மனிதநேயப் பணிகளும் அவரது வாழ்வின் அழியாத சாட்சிகளாகத் திகழும்.

அவரது குருத்துவப் பணிக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். அவர் செய்த நன்மைகளுக்காக இறைவனைப் புகழ்வோம். அவரது ஆன்மாவுக்காக இறைவனின் இரக்கத்தை மன்றாடுவோம்.

**‘நன்று நன்று நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளனே, சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்குரியவராய் இருந்தீர்...
என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்குகொள்ளும்.’** *(மத்தேயு 25:21)*




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

ரதி, யாழ்ப்பாணம்)

**கேள்வி: தாய் தந்தையரைப் பரா மரிப்பது பிள்ளைகளின் பொறுப்பு. ஆனால், பெற்றோரின் மட்டிலுள்ள கட மையைப் பிள்ளைகள் நிறைவேற்றுகிறார்கள் இல்லையே! காரணம் என்ன?**

**பதில்:** ரதி, தம்மைப் பெற்றவர்களையே பாரமாக நினைக்கிற ஒரு தலைமுறையில் வாழ்கிறோம். அப்பெற்றோர் வயது முதிர்ச்சி யிலும் எவ்வளவு பெரிய சொத்தாகக் குடும் பத்தில் இருக்கிறார்கள் என்பதைக் கண்டு கொள்ள நமது அகக்கண்களைத் திறக்க வேண்டும். பொருளாதார நலன்களை முன்னிறுத்துவதால் அவர்களின் மதிப்பையும் பெறுமதியையும் பொதுவாக இத்தலைமுறையினர் கண்டுகொள்ளாமல் போகிறார்கள். இவ் மிகப்பெரும் இழப்பினை இத்தலைமுறையினர் உணர்வதில்லை. இன்று குடும்பங்களில் ஓரிரு பிள்ளை-களோடு நிறுத் திக்கொள்வதற்கு வயதான பெற்றோரை இழந்துநிற்பதும் ஒரு காரணம்! ஏனென்றால் பெற்றால் பிள்ளை பார்க்க ஆளில்லை! அண்மையில் ஒருவரின் அனுபவத்தைப் படித்தேன்: "அம்மா ஒவ்வொரு நாளும் கவலைப்படுவாள். ஆனால், ஒருநாளும், அவள் அவளைப் பற்றிக் கவலைலப்பட்டிருக்க மாட்டாள்!"

*(அமலன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: ஆன்மீக மையங்கள் களியாட்ட மையங்களாக மாறுவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**பதில்:** மண்ணின் அடையாளத்தையும் மக்களின் வலிகளையும் மறை முகமாக அழிப்பதற் கான திட்டங்கள், செயற்பாடுகள்!

*(விஜி, யாழ்ப்பாணம்)*

*(சசி, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: யாழ்ப்பாணத்தில் ஒரு புதிய கலா சாரம் உருவாகி வருகின்றது. யானையை பயன்படுத்துவதையும் பெருந்தொகைப் பணம்கொடுத்து இறக்குமதி செய்யப்பட்ட மேள குழுக்களையும், நடனத் தாரகைக் குழுக்களையும் கொண்டுவருகிறார்கள். இவற்றை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

**பதில்:** சசி, கொஞ்ச நாட்களுக்கு முன்பாக ஒரு கோவிலுக்கு யானையைக் கொண்டுவந்து வீதி உலா வந்திருக்கிறார்கள். யானை வெருண்டடித்து ஓடியதில் சிலர் காயமடைந்த சம்பவத் தைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்! எங்காவது ஓரிடத்தில், நான்கு பேரை யானை நாலு உழக்கு உழக்கென்று உழக்கி உயிர்போக்கினாலே தவிர, இப்படி ஏற்பாடு செய்பவர்களும் இதனை விடுப்புப் பார்க்கச் செல்லபவர்களும் திருந்த மாட்டார்கள்!

## புதிய ஆயரை வரவேற்ற...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் புனித நீரை வழங்கினார். ஆயர் அதனைத் தம்மீதும் இறைமக்கள் மீதும் தெளித்-தார்.

**ஆயர் பீடத்தில் அமர்ந்த புதிய மேய்ப்பர்**

பணிப்பொறுப்பேற்பு நிகழ்வின் மையமாக நற்கருணைக் கொண்டாட்டம் அமைந்தது. ஓய்வுநிலை ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் புதிய ஆயர் பி.அன்ரன் றஞ்சித் ஆண்டகை அவர்களின் கரத்தைப் பற்றிய வாறு ஆயர் பீடத்திற்கு அழைத்துச் சென்ற தருணம் நெகிழ்ச்சிமிக்கதாக அமைந்தது. புதிய ஆயர் அப்பீடத்தில் அமர்ந்தபோது, மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணிப் பொறுப்பு முன்னைய ஆயரி டமிருந்து அவரைத் தொடர்ந்து பொறுப்பேற்ற ஆயரிடம் ஒப்படைக்கப்படுவது திருஅவையின் மரபாகும். அதனைத் தொடர்ந்து, மறைமாவட்டக் குருக்கள் தமது கீழ்ப்படிதலை உறுதிப் படுத்தி, ஆயரின் மோதிரத்தை முத்தமிட்டனர். துறவற சபைகளினதும் பொதுநிலையினரதும் பிரதிநிதி கள் புதிய மேய்ப்பருடனான தமது திருஅவையின் ஒன்றிப்பை வெளிப்படுத்தினர்.

**அனைவருக்குமான மேய்ப்பர்**

திருப்பலியின் நிறைவில் உரையாற்றிய மறைமாவட்டக் குருமுதல்வர், புதிய ஆயர் கத்தோலிக்க இறைமக்களின் மேய்ப்பராக மட்டுமன்றி, இப்பிரதேச மக்கள் அனைவருக்கும் தந்தையாகவும் விளங்குவார் எனக் குறிப்பிட்டார். அவர் தமது உரையில் புதிய ஆயருக்கு முன்னுள்ள பணிகளை எடுத்துரைத்து, நாம் எல்லோரும் அவர் பணியில் ஒத்துழைப்பு வழங்கி ஒரே மந்தைகளாக ஆயரின் வழிசெல்ல அழைப்பு விடுத்தார்.

**புதிய ஆயரின் கன்னி உரை**

புதிய ஆயர் தமது கன்னி உரையில் இலங்கைத் திருஅவை வர லாற்றில் யாழ்ப்பாண மறை மாவட்டம் மிகவும் முக்கியமானதோர் இடத்தை வகிக்கின்றது. இம் மறைமாவட்டத்தின் உரு வாக்கத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும் பல ஆயர்களும், அருட்பணியாளர்களும், பொது நிலை யினரும் அர்ப்பணிப்புடனும் தியாகத்துடனும் பணியாற்றி வருக்கிறார்கள். அவர்களுடைய மறைப்பணியையும் இத்தருணத்தில் நன்றியோடு நினைவு கூருகின்றேன். அவர்கள் வழி நின்று இம் மறைமாவட்டத்தை மென்மேலும் வளர்த்தெடுக்கும் பொறுப்பு இன்று என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 30 வருடங்களாக நடைபெற்று வந்த கொடிய யுத்தம் எம் மண்ணுக்கும், எம் மக்களுக்கும் பாரிய வலிகளையும், வடுக்களையும் ஏற்படுத்தி இருக்க-ின்றது. எம் மக்கள் ஆயிரக்கணக்கில் தம் உறவுகளை இழந்து, உடமைகளை இழந்து, இல்லிடங்களை இழந்து அகதிகளாக இன்றும் அலைந்து திரிகின்றார்கள். காணாமல் போன உறவுகளைத் தேடி நீதி கோரி வருகின்றார்கள். இவர்களுக்கு மனித என்புகளே மீதியானது. இம் மக்களின் உணர்வுகளுடன் உடனிருந்து, அவர்கள் வாழ்வில் நம்பிக்கையை ஏற்படு-த்தி வாழ வழிகாட்ட வேண்டிய பொறுப் பும் எனக்கிருக்கின்றது என்பதையும் நான் நன்கு உணர்ந்திருக்கின்றேன்.

எனவே ஆன்மீக வழியில் கடவுளில் உறுதியான நம்பிக்கையோடு, அமைதியான முறையில், நீதியான வழிகளில் எம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம். இத்தகைய அணுகுமுறைகளை முன்னெடுத்துச் செல்ல இம்மண்ணில் வாழ்கின்ற அனைத்து மக்களது ஒத்துழைப்பையும் எதிர்பார்த்து நிற்கின்றேன் எனக் குறிப்பிட்டார்.

## யாழ் புனித மடுத்தீனார்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

"வந்து பாருங்கள்"நிகழ்வின் 3ம் நாள் நிகழ்வுகள் 6.30 மணியளவில் காலைச் செபத்தோடு ஆரம்பமாகி தொடர்ந்து திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. புனித சவே ரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் P.தயாபரன் அடிகளார் தலைமைதாங்கி ஒப்புக் கொடுத்தார். நிகழ்வில் பங்கெடுத்த மாணவர்களை அதிபர் தனிப்பட்ட முறையில் சந்தித்துக் கலந்துரையாடினார். சமநேரத்தில் ஏனைய மாணவர்க-ளும், குருமட மாணவர்களும் குழுக்களாகப் பிரிந்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

அதன் நிறைவில் இறை அழைத்தலை வளர்ப்பதில் குடும்பத்தின் பங்கு எனும் மையக்கருத்தில் அகவொளி குடும்ப நல இயக்குநர் அருட்பணி எம்.டேவிட் அடிகளாரால் இறை அழைத்தலை விதைப்பதில் குடும்பத்தின் பங்கு எத்தகையது என்பது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. நிறைவில் ஒரு நாள் குருமடத்தில் எனும் குறும்படம் திரையிடப்பட்டது. தொடர்ந்து "வந்து பாருங்கள்"நிகழ்வில் பங் கெடுத்த மாணவர்களின் அனுபவப் பகிர்வும் இடம்பெற்றது.

உங்களை உருவாக்க புனித மடுத்தீனார் சிறிய குருமடமும், உங்களுக் காக ஓர் அழகிய பயணமும் காத்திருக்கிறது.

**'உன் பணிக்கு நான் இதோ'** என இறைவன் குரலுக்குச் செவிசாய்த்துப் பணிசெய்ய ஆர்வமுள்ளவராயின் தொடர்புகொள்க

(அதிபர், புனித மடுத்தீனார் சிறிய குருமடம்)

**துஸ்யந்தன் - புனித அந்தோனியார் ஆலயம், பாசையூர்**

சிறு வயதில் இருந்தே குருவாக வரவேண்டும் என்ற ஆசை என் உள்ளத் தில் இருந்துகொண்டு இருக்கின்றது. இந்த ஆசையை என்னுள் விதைத்தவர் அருட்சகோதரி லுமினா அவர்கள். "வந்து பாருங்கள்" மூன்று நாள் நிகழ்வுகளும் சிறப்பாக இடம்பெற்றது. இதில் பங்கெடுத்ததன் ஊடாக குருவாக வரவேண்டும் என்ற என் ஆசை மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நிச்சயமாக நான் குருமடம் வந்து சேர்ந்து என் உருவாக்கத்தைப் பெறுவேன்.

**ஒபீலியன் - புனித பிலிப்பு நேரியார் ஆலயம், அல்லைப்பிட்டி**

சாட்டி பங்குத்தந்தை அருட்பணி பாஸ்கரன் மற்றும் எமது ஆலயத்தில் மறையுரையாற்ற வரும் OMI குருக்கள், குருவாக வரவேண்டும் என்ற ஆர் வத்தை எனக்குக் கொடுத்தார்கள். இங்குவந்து நின்ற மூன்று நாட்களிலும் குரு-வாக வருவதற்குரிய விருப்பம் இன்னும் வளர்ந்துள்ளது.

**ஜெசே - புனித மரியன்னை பேராலயம்**

இந்த இடம் எனக்கு நன்றாகப் பிடித்துள்ளது. இந்த மூன்று நாட்களும் நான் மகிழ்ச்சியாக இருந்தேன்.

**தர்மிகன் - புனித செபமாலை அன்னை ஆலயம், பண்டத்தரிப்பு**

நான் புனித ஹென்றி அரசர் கல்லூரி, இளவாலையில் கல்வி கற்கின் றேன். இந்த நிகழ்வில் பங்கெடுத்ததன் ஊடாக சிறிய குருமடத்தில் எவ்வாறான உருவாக்கம் கொடுக்கப்படுகின்றது என்பதனையும் குருமடத்தின் நாளாந்த செயற்பாடுகளை அறியக்கூடியதாகவும் இருந்தது. இதனூடாகக் குருவாக வர வேண்டும் என்ற விருப்பம் துளிர்விட்டுள்ளது. வீட்டிற்குச் சென்று பெற்றோருடன் கதைத்த பின்பு குருமடம் சேர்வதற்கு எண்ணியுள்ளேன்.

**கெடன் - புனித அந்தோனியார் ஆலயம், இறம்பைக்குளம்**

எனக்குப் புனித மடுத்தீனார் குருமடத்தில் படிக்கும் ஒரு அண்ணாவைப் பார்த்து நானும் குருவாக வரவேண்டும் என்ற ஆசை உருவானது.

**அபிஷேக் - புனித கப்பலேந்தி மாதா ஆலயம், கட்டைக்காடு**

என்னுடைய அண்ணா இச்சிறிய குருமடத்தில் இருந்தார். பின்பு விரும்பம் இல்லாததால், வீடு வந்து விட்டார். இதற்குப் பின்பு நான் குருவாக வரவேண்டும் என்று ஆசைப்பட்டேன். எமது பங்குத்தந்தை அருட்பணி வசந்-தன் அடிகளார் சிறிய குருமடத்தில் இடம்பெற இருக்கும் "வந்து பாருங்கள்" நிகழ்விற்குப் போகச் சொன்னார். வந்த முதல் நாளிலிருந்தே எனக்குத் தேவை யான முழு வசதிகளும் சிறப்பாக எமக்குச் செய்து கொடுக்கப்பட்டிருந்தது.இங்கு இடம்பெற்ற ஒவ்வொரு நிகழ்வுகளும் ஒவ்வொரு அர்த்தத்தை எங்களுக்குக் கொடுத்தது. இரண்டாம் நாள் திருப்பலியை ஒப்புக்கொடுத்து புதிய ஆயர் தனது ஆயத்துவ அபிஷேகத்தின் 6ம் ஆண்டு நிறைவை எம்மோடு கொண்டாடியுள் ளது சிறப்பாக இருந்தது. சிறிய குருமடத்தில் இருந்த அனைத்து மாணவர்க-ளும் அன்போடு பழகினார்கள். இன்னும் 2, 3 நாட்கள் நீடித்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

**அமல்தாஸ் - புனித மடுத்தீனார் குருமடம்**

நான் ஐந்து ஆண்டுகளாக இங்கு உருவாக்கம் பெற்றுக்கொண்டிருக்கின் றேன். "வந்து பாருங்கள்"நிகழ்வு முதலிலேயே திட்டமிடப்பட்டிருந்தது. 16 பங்கு களிலிருந்து 52 மாணவர்கள் இதில் பங்கெடுத்தார்கள். இந்நிகழ்வுகள் ஊடாக இறை அழைப்பை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம், பெற்றுக்கொண்ட அழைப்பை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது மற்றும் இறை அழைப்பை இழப்பதற்குரிய காரணிகள் எவை என்பன தொடர்பாக அறிய முடிந்தது.

## திருச்சிலுவையின் மகிமையில்....

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகும்படி அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகிறேன் என இயேசு தந்தையை நோக்கித் தமது திருத்தூதர்களுக்காக செபித்தார். அர்ப்பணம் செய்கின்றவர்கள் தம்மை முற்று முழுதாகப் பிறருக்காக அர்ப்பணிக்கின்றவர்க ளாக வாழ வேண்டும் என்பதைக் குறித்து இயேசு தம்மைச் சிலுவையில் பலியாக் கினார். அர்ப்பண வாழ்வு வாழ்கின்றவர்கள் தம்மை அழைத்த இறைவனின் மகிமைக்காக முழுமையாகத் தம்மை அர்ப்பணித்து உண்மையினால் அவருக்கு உரியவராகும்படி அழைக்கின்றனார்.

இதற்கேற்ப திருச்சிலுவையின் அருட்சகோதரிகளும் தாம் ஏற்றுக்கொண்ட அர்ப்பண வாழ்வை சபையின் தனித்தன்மை குன்றாமல் தொடர்ந்தும் பயணித்தி ருப்பது இறைவனின் செயலே. திருச்சிலுவை சீடத்துவத்தின் சின்னமாகவும் விசு வாச வாழ்விற்கு வலுவூட்டும் சக்தியாகவும் விளங்குவதுடன் உலக மீட்பிற் காகத் தன்னைத் தாழ்த்திய கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற நம்மை அழைக் கின்றது. திருச்சிலுவையைத் தாங்கிப் பல்வேறு வெற்றிகள், சாதனைகள், புகழ்ச்சி கள், வளர்ச்சிகளைச் சந்திக்கும் திருச்சிலுவை அருட்சகோதரிகள் தோல்விகள், சோதனைகள், இகழ்ச்சிகள், தளர்ச்சிகள். விமர் சனங்கள் என்பன பல சவால்களுக் கும் முகங்கொடுப்பது நிதர்சன உண்மை. உலகின் தேவைக்கேற்ப எமது சபை மேலும் தளைத்தோங்க உங்களது தட்டிக்கொடுத்தல்களும், உறுதுணையும் இருக்க வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

## 'இதயசுத்தியுடனும் நியாய உணர்வுடனும் செயற்பட்டால் நீதிக்கான பயணம் நீண்டதாக இருக்காது'

முன்நாள் குருமுதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெபரட்ணம்



நீதிக்கான பயணச் செயன்முறைக்குப் பொறுப்பானவர்கள் இதயசுத்தியுடனும் நியாயஉணர்வுடனும் செயற்பட்டால், நீதிக்கான பயணம் நீண்டதாக இருக்காதென யாழ். மறைமாவட்ட முன்நாள் குருமுதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் அவர்கள் தெரிவித்துள்ளார். வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் சர்வதேச தினத்தை முன்னிட்டு, வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் கடந்த 30ஆம் திகதி யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். வலிந்து காணாமலாக்கப்படுதல் என்பது மனிதனால் மனிதனுக்கு இழைக்கப்படும் மிகக் கொடூரமான பேரவலம் எனக் குறிப்பிட்ட குருமுதல்வர் அவர்கள், ஆவணி 30 வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சர்வதேசதினத்தை மிகக்கொடூரமான மனிதர்களின் தினமெனவும் அடையாளப்படுத்த முடியுமெனவும் தெரிவித்தார்.

'நீதிக்கான நீள்பயணம்' என்ற கருப்பொருளில் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், உண்மையில் நீதிக்கான பயணம் நீண்டதாக இருக்க வேண்டியதில்லை என அவர் சுட்டிக்காட்டினார். நீதியை நிலைநாட்டும் பொறுப்பில் இருப்பவர்கள் நியாயமானவர்களாகவும், இதயசுத்தியுடனும் செயற்படக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என வலியுறுத்திய அவர், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விவகாரத்தில் நீதியை நிலைநாட்டுவதற்கான பொறுப்புகளை, நேர்மையுடனும் நியாயத்துடனும் நிறைவேற்றக்கூடியவர்கள் நியமிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

## புனித மரியாள்

### குடும்பங்களுக்கான ஆற்றுப்படுத்தல் தியானம்



சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலய பங்குத்தந்தை அருட்பணி R.C.சகாயநாயகம் அடிகளார் தலைமையில் அருட்பணி V.C.இராபேல் கூத்தூர் அடிகளாரின் வழிநடத்தலில் 24 தொடக்கம் 29 வரையான நாட்களில் மரியாளைப்பற்றிய இறைவார்த்தை தியானம் நடைபெற்றது. திருப்பலியும், இறைவார்த்தை வழிபாடும், ஒப்புரவு அருட்சாதனமும், குடும்பங்களை மரியன்னைக்கு ஒப்புக்கொடுக்கும் வழிபாடும், 1000 மணிசெபமாலையும், குணமளிக்கும் ஆராதனையும், கன்னிமரியாள் பற்றிய கண்காட்சியும் நடைபெற்றது.

இதனூடாக மக்கள் அனைவரும் மரியாள் பற்றிய பல்வேறு விடயங்களை அறியக்கூடியதாக இருந்தது. இறைவார்த்தையை வாசிக்கவும் அதனை வாழ்வாக்கவும் இத்தியானம் எமக்கு உதவியாக இருந்தது. ஆன்மீக ரீதியாக மக்கள் தகுந்த ஆயத்தத்தோடு பங்குபற்றியது சிறப்பம்சமாகும் இறுதி நாள் தூய ஆவியின் அபிஷேக ஆராதனை நிறைவு பெற்றதை தொடர்ந்து மக்கள் அனைவரும் எரியும் மெழுகுதிரிகளை கையில் ஏந்தியவர்களாக மரியன்னையின் திருச்சுரூபபவனியில் பங்குபற்றினர். தொடந்து உணவு பகிர்வுடன் மரியாளின் தியானம் நிறைவு பெற்றது.

## கிறிஸ்து அரசர் ஆலய பங்கு மக்களின் அனுபவ பயணம்



கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய பங்குமக்களையும் மறைக்கல்வி மாணவர்களையும் இணைத்து முன்னெடுக்கப்பட்ட கள அனுபவ பயணம் கடந்த 27,28,29ஆம் திகதிகளில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை இராஜேந்திரம் ஸ்ரலின் அவர்களின் வழிநடத்தலில் ஆலய இளையோரின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பங்குமக்களும் மறைக்கல்வி மாணவர்களும் பதுளை நுவரெலியா, கண்டி ஆகிய மாவட்டங்களுக்குச் சென்று அங்குள்ள பிரசித்திபெற்ற இடங்களை பார்வையிட்டனர். இந்நிகழ்வில் 50 வரையானவர்கள் பங்குபற்றி பயனடைந்தனர்.

## புதுக்குடியிருப்புப் பங்கில் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு




புதுக்குடியிருப்புப் பங்கில் முன்னெடுக்கப்பட்ட சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 30ஆம் திகதி புதுக்குடியிருப்புப் புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை அஜந்தன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புலமைப்பரிசில் பரீட்சை, கா.பொ.த சாதாரண தரம் உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவர்கள், கல்விப் புலங்களில் சாதித்தவர்கள், கலை மற்றும் ஏனைய துறைகளில் தேசிய மட்டங்களில் சாதித்தவர்கள், அரச பணிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களென 100க்கும் மேற்பட்ட சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் சிறப்பு நிகழ்வாக மறைக்கல்வி மாணவர்களால் 'சின்றெல்லா' ஆங்கில நாடகமும் மேடையேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. துரைராசா ரவிகரன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் உள்நாட்டு இறைவரித்திணைக்கள பிரதி ஆணையாளர் திரு. செபஸ்தி அருள் ராஜ்குமார், வவுனியாப் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி மதிவதனி மற்றும் புதுக்குடியிருப்பு உதவிப் பிரதேச செயலாளர் கிரிதரன் டென்சியா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் திரு. நீவிட் ஜீவராசா, புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலய அதிபர் அருட்தந்தை றொபின்சன் யோசப், சட்டத்தரணி திரு. தனஞ்சயன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

## நற்கருணைநாதர் சபை இலங்கை மாகாண புதிய தலைமைத்துவ குழு நிர்வாக தெரிவு



நற்கருணைநாதர் சபை இலங்கை மாகாண முதல்வராக அருட்தந்தை யஸ்ரின் சௌகான் அவர்கள் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். நற்கருணைநாதர் சபை இலங்கை மாகாண புதிய தலைமைத்துவ குழு நிர்வாக தெரிவு கடந்த 03ஆம் திகதி நடைபெற்றது.

இத்தெரிவில் அருட்தந்தை யஸ்ரின் சௌகான் அவர்கள் மாகாண முதல்வராகவும் அருட்தந்தையர்கள் நிலிந்ற குணசேகர, றொஜர் ஜோண்சன் பெர்னாண்டோ, அன்ரனி மார்க்கஸ், மனுவல் ஆசீர்வாதம் ஆகியோர் மாகாண ஆலோசகர்களாகவும் அருட்தந்தை மார்க்கஸ் கொடிப்பிலி அவர்கள் மாகாண நிதியாளராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்தில் குடும்பங்களுக்கான சிறப்பு ஆற்றுப்படுத்தல் நிகழ்வு

யாழ். அகவொளி குடும்பநல நிலையத்தின் ஏற்பாட்டில் கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்தில் முன்னெடுக்கப்பட்ட குடும்பங்களுக்கான சிறப்பு ஆற்றுப்படுத்தல் நிகழ்வு கடந்த 28, 29, 30ஆம் திகதிகளில் நடைபெற்றது. கோப்பாய் பங்குத்தந்தை அருட்தந்தை மடுத்தீன் பத்திநாதர் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் குடும்பநல நிலைய இயக்குநர் அருட்தந்தை ம. டேவிட் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இல்ல தரிசிப்புக்கள், உளவியல் ஆற்றுப்படுத்தல், சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. இன் நிகழ்வை அருட்தந்தை ம. டேவிட், திருக்குடும்ப கன்னியர் சபை மாகாண முதல்வி அருட்சகோதரி ஜொய்லின் றாஜி ஸ்ரான்லி அவர்களின் வழிநடத்தலில் அருட்சகோதரிகள் அ.நீற்றா, டெ.வலன்ரீனா, நிறோஸா மற்றும் நவகன்னி சகோதரி கொறற்றி ஆகியோர் இணைந்து நெறிப்படுத்தினர். இறுதிநாளன்று மாலை, அருட்தந்தை டேவிட் அவர்களின் தலைமையில் சிறப்புத் திருப்பலியும், திருப்பலி நிறைவில் தொலைபேசி பாவனை தொடர்பான விழிப்புணர்வு பட காட்சிப்படுத்தலும் அனுபவ பகிர்வும் இடம்பெற்றன. இந்நிகழ்வில், அருட்சகோதரிகள் 120 குடும்பங்களை தரிசித்து, குடும்பங்களில் நிலவும் போதைப்பொருள் பாவனை, திருமண உறவுச்சிக்கல் போன்ற பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடி அருட்சாதனங்களின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைத்தனர்.

## தீவக மறைக்கோட்ட இளையோருக்கான சிறப்பு நிகழ்வு



தேசிய கத்தோலிக்க இளையோர் ஞாயிறை சிறப்பித்து யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட தீவக மறைக்கோட்ட இளையோருக்கான சிறப்பு நிகழ்வு கடந்த 5,6ஆம் திகதிகளில் சாட்டி புனித சிந்தாத்திரை அன்னை திருத்தலத்தில் நடைபெற்றது. ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை ஜோண் குருஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வின் முதல்நாளன்று மெழுகுவர்த்தி பவனி, நற்கருணை ஆராதனை, ஒப்புரவு அருட்சாதனம், மறைமாவட்ட இளையோர் வளவாளர்களின் தலைமைத்துவ பயிற்சி என்பன நடைபெற்றன. இரண்டாம் நாள் இளையோர் பவனியும் தொடர்ந்து அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் அவர்களின் தலைமையில் சிறப்பு திருப்பலியும் இடம்பெற்றன.

திருப்பலி நிறைவில் யாழ். அகவொளி குடும்பநல நிலைய உதவி இயக்குநர் அருட்தந்தை ஜெறாட் அவர்களின் **'நம்முள் தொலைந்த இளமை ஒரு மீள்தேடலின் பயணம்'** என்னும் தலைப்பிலான கருத்துரை, திரு. பாஸ்கரன் அவர்களின் பாதுகாப்பான புலம்பெயர்தல் பற்றிய விழிப்புணர்வு கருத்தமர்வு, மறைமாவட்ட இளையோர் வளவாளர்களின் தலைமைத்து வகிபாகம் பற்றிய கருத்துரை என்பவற்றுடன் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. இந்நிகழ்வில் 240 இளையோர் பங்குபற்றி பயனடைந்தனர்.

## யாழ். புனித அடைக்கல அன்னை ஆலய வருடாந்த திருவிழா



யாழ். புனித அடைக்கல அன்னை ஆலய வருடாந்த திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை அருளானந்தம் யாவிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த08ஆம் திகதி நடைபெற்றது. 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 7ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை பி. அன்ரன் ரஞ்சித் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை யாழ். மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர். திருவிழா அன்று மாலை அன்னையின் திருச்சொரூப வீதிவல தேர்ப்பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெற்றன.

## புனித ஆரோக்கியநாதர் ஆலய திருவிழா



வட்டக்கச்சி இராமநாதபுரம் புனித ஆரோக்கியநாதர் ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை ராஜ் டிலக்ஸன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 30ஆம் திகதி நடைபெற்றது. 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 29ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழா திருப்பலியை புனித வளனார் அச்சக முகாமையாளர் அருட்தந்தை ஏயின்ஸிலி றொஷான் அவர்களும் நற்கருணைவிழா திருப்பலியை கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை றோய் பேடினன்ட் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர். அருட்தந்தையர்கள் ஏயின்ஸிலி றொஷான் மற்றும் றோய் பேடினன்ட் ஆகியோரின் குருத்துவ வெள்ளிவிழா யூபிலியை நினைவுகூர்ந்து திருவிழா, நற்கருணை திருப்பலிகளின் நிறைவில் அவர்களுக்கான கௌரவிப்புக்களும் நடைபெற்றன.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2026ம் ஆண்டு புரட்டாதி மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.